விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி


பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2040 மார்கழி 14 செவ்வாய்க்கிழமை (29.12.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 10

# சூடு பிடிக்கிறது தேர்தல் பிரசாரம்;
# வாக்குறுதி வழங்குதலும் தீவிரம்!



## வேலையற்ற பட்டதாரிகளுக்கு ரூ.2000 கொடுப்பனவென அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வேலையற்ற பட்டதாரிகளுக்கு மாதாந்தம் 2000 ரூபாய் கொடுப்பனவு வழங்கப்படும் என ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ள அதேவேளை எதிர்கால சந்ததிகள் அதிகளவு நன்மை பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் அரசு திட்டங்களை வகுத்துள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 738 தமிழ்க் கைதிகள் இவ்வாரம் விடுவிப்பு

(கொழும்பு)

இறுதி யுத்தத்தின் பின்னர் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுள் 738 பேர் இவ்வார இறுதிக்குள் விடுதலை செய்யப்படுவார்களென சட்ட மா அதிபர் மொகான் பீரிஸ் தெரிவித்தார்.

நிவாரணக் கிராமங்களில் இருந்தபோது விசாரணைக்கென கொண்டு செல்லப்பட்டவர்களுள் 700 பேரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களுள் 38 பேரும் இவ்வாறு விடுவிக்கப்படுவதாக சட்ட மா அதிபர் கூறினார். சிஐடியினரால் தடுத்து

(16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் காணாமல் போனோர் இராணுவத்தினரிடம் இருப்பதாக பிரசாரம்
### பொய் என்கிறது பலாலி படைத்தலைமையகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் காணாமல் போனவர்கள் இராணுவத்திடம் இருப்பதாக பொய்ப்பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பலாலி படைத்தலைமையகம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக பலாலி படைத்தலைமையகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு வருமாறு,

யாழ். குடாநாட்டு மக்களை பயமுறுத்தி கப்பம் பெறப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. உங்களை பயமுறுத்தும் கும்பல் தங்களின் வங்கிக்கணக்குகளில் பணம் வைப்பிலிடுமாறு

(16ஆம் பக்கம் பார்க்க)

## காணாமல் போனோரை விடுவிப்பதாகக் கூறி பொது மக்களிடம் இருந்து பணம் கொள்ளை!



### யாழ்ப்பாணத்தில் அரங்கேறிய மோசடி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் 2006, 2007,2008 காலப் பகுதியில் காணாமல் போனவர்களை மீட்டுத்தருவதாகக்கோரி இனந்தெரியாதோரால் பொதுமக்களிடம் பெருந்தொகையான பணம் மோசடி செய்யப்பட்டு வருகிறது.

இவ்வாறான ஒரு சம்பவம் நேற்று பகல் 12.30 மணியளவில் யாழ்ப்பாணம் சிறைச் சாலைக்கு அண்மையில் இடம் பெற்றுள்ளது. இது தொடர்பாக தெரிய வருகையில்,

தெல்லிப்பழை பிரதேச செயலக கிராம சேவையாளர் ஒருவருக்கு

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்குச் சட்டம் முற்றாகத் தளர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் அமுல்படுத்தப்பட்டு வந்த ஊரடங்குச்சட்டம் நேற்று முதல் முழுமையாக தளர்த்தப்பட்டுள்ளதாக சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் நள்ளிரவு 12.00 மணி முதல் அதிகாலை 4.00 மணிவரையும் ஊரடங்குச் சட்டம்

(16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கல்வி அபிவிருத்தி தொடர்பில் அரசு அக்கறையின்றி செயற்படுகிறது
### பிரதிக்கல்வி அமைச்சர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழ்க் கல்வி அபிவிருத்தி தொடர்பில் கல்வி அமைச்சு அக்கறையின்றி செயற்படுவதாக குற்றச்சாட்டியிருக்கும் பிரதிக் கல்வி அமைச்சர் எம்.சச்சிதானந்தன் தமிழ்க் கல்வி அபிவிருத்தி தொடர்பான எந்தவொரு செயற்றிட்டத்துக்கும் ஒத்துழைப்பு வழங்கப்படுவதில்லை என தெரிவித்துள்ளார்.

தமிழ்க் கல்விக்கு வழங்கப்படும் முன்னுரிமையின் அடிப்படையிலேயே தாம் ஜனாதிபதி தேர்தலில்யாருக்கு ஆதரவு என்பதை கூற முடியும் என

(15ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி வேட்பாளர் சிவாஜிலிங்கம் இந்தியாவுக்குச் செல்வதற்குத் தடை
### த ரைம்ஸ் ஒவ் இந்தியா தகவல்

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் இனி இந்தியாவுக்கு செல்ல முடியாதவாறு அவரது விசா அனுமதி தடை விதிக்கப்பட்டுள்ளதாக த ரைம்ஸ் ஒப் இந்தியா தெரிவித்துள்ளது. சிவாஜிலிங்கம் அண்மையில் டுபாயில் இருந்து இந்தியாவுக்கு வந்த வேளையில் விமானநிலையத்தில் வைத்து இந்திய குடிவரவுத்துறை அதி காரிகளால் நாடு கடத்தப்பட்டார்.

இந் நிலையில் அவர் இந்திய மத்திய அரசாங்கத்தின் சிறப்பு

(16ஆம் பக்கம் பார்க்க)

## வைத்தியர் சிவபாலன் நேற்று விடுதலை

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் மற்றும் இலங்கை இராணுவத்தினருக்கு இடையிலான மோதலின் இறுதிக் காலத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் செயற்பட்டுவந்த மருத்துவ மனையில் பணியாற்றிய மருத்துவர்களில் ஒருவரான சிவபாலன் நேற்று திங்கட்கிழமை நீதிமன்றத் தினால் விடுவிக்கப்பட்டுள்ளார்.

புலிகளின்

(16ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞரை காணவில்லை; பொலிஸாரிடம் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்ற இளைஞர் ஒருவர் காணாமல் போயுள்ளதாக அவரின் உறவினர்கள் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, கடந்த நவம்பர் 11 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பின் புறநகர் பகுதியான தெகிவளையிலுள்ள உறவினர்களைக் காணச் சென்ற வேல்முருகன் கிருபானந்தன் வயது 29 என்ற இளைஞன் காணாமல் போயுள்ளார்.

அவரைக் கொழும்பில் உள்ள பல இடங்களில் தேடிய போதும் அவர் எங்கும் காணப்படவில்லை என அவரின் உறவினர்கள் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர். (ச-5)

## தமிழ்நாட்டிலுள்ள அகதிகள் இலங்கைக்கு வருவதற்கு ஆர்வம்

(சென்னை)

இலங்கையிலிருந்து அகதிகளாக சென்று தமிழ் நாட்டில் பல்வேறு முகாம்களில் தங்கியுள்ளவர்கள் தற்போது இலங்கையில் போர் முடிந்து சகஜ நிலையிலுள்ளதால் தங்களது சொந்தங்கள் மற்றும் சொத்துக்களின் நிலைகளை அறிய ஆர்வம் காட்டிவருவதாக தமிழ் நாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்கள் குறித்து கியூப்பிரிவுப் பொலிஸார் விசாரணை

(16ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# புலிகளிடமிருந்து பிரிந்த கருணாவை ஐ.தே.க.சரியாக பயன்படுத்தவில்லை

## அலிசாஹீர் மௌலானா தெரிவிப்பு

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து கருணாவை பிரித்தெடுப்பதற்கு பாரிய பங்காற்றியதாக கருதப்படும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தற்போதைய ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு தெரிவிப்பவருமான அலிசாஹீர் மௌலான நேற்று முதன் முதலாக ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தினார்.

அரசாங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று முற்பகல் கொழும்பு மஹாவலி கேந்திர நிலையத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் கலந்து கொண்டார்.

இந்த செய்தியாளர் மாநாட்டில் அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் ரிசாட் பதியுதீன் தேசிய நல்லிணக்க ஒருமைப்பாட்டு அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், ஜனாதிபதி ஆலோசகர் அஸ்வர் மற்றும் தேசிய ஐக்கிய முன்னணியின் செயலாளர் அபுகலாம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன் போது கருத்து தெரிவித்த அலிசாஹீர் மௌலானா விடுதலைப் புலிகளிடமிருந்து பிரிந்து வந்த கருணாவை அப்போது அரசமைத்த ஐக்கிய தேசியக் கட்சியினர் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ளவில்லை எனவும் குற்றம் சாட்டினார்.

ஆனால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவோ விடுதலைப் புலிகளிடமிருந்து பிரிந்து வந்த கருணாவை சரியான முறையில் பயன்படுத்திக்கொண்டதுடன் அவருக்கான அங்கீகாரத்தையும் கொடுத்துள்ளதாக தெரிவித்தார்.

சுமார் மோத பதவி பறிக்கப்பட்டமைக்காக முப்படைகளின் சேனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையே எதிர்த்து போட்டியிடுகின்ற முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா எதிர்க்கட்சிகள் தெரிவிப்பது போன்று அதிகாரங்கள் நிறைந்த நிறைவேற்று அதிகாரமுறைமையைக் கொண்ட ஜனாதிபதி முறைமையை மோதத்திற்குள் இல்லாதொழிப்பாரா? என்ற சந்தேகம் உள்ளது.

இங்கு தொடர்ந்து கருத்துரைத்த அவர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையினை ஒழித்து நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் முறையினை இவர் ஏற்படுத்த மாட்டார்.

அதுமாத்திரமின்றி அவர் வெற்றி பெற்றால் அடுத்த வேது நிமிடத்திலேயே இந்த நாட்டில் இராணுவ ஆட்சியை நிலைநாட்டுவார். இதனால் தமிழ் பேசும் சிறுபான்மை மக்களாகிய தமிழ், முஸ்லிம் மக்கள் நன்கு யோசித்து 4வருடத்தில் 30 வருட பயங்கரவாதத்தை நிறைவிற்கு கொண்டுவந்த ஜனாதிபதிக்கு இந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கான ஒரு வாய்ப்பு வழங்கும் பொருட்டு நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் வாக்களித்து அவரை வெற்றி பெறச்செய்ய வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

### கருணாவை தெரியும்

இதேவேளை முன்பு வழங்கிய செவ்வி ஒன்றில் மட்டக்களப்பில் பிறந்து வளர்ந்த தனக்கு கருணாவை சிறுவயது முதல் தெரியும்.தான் மேற்படிப்புக்காக இந்தியா சென்று விட்டு நாடு திரும்பியபோது கருணா விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து கொண்டதை அறிந்ததாக தெரிவித்தார்.அதன் பின்னர் அவர் அந்த அமைப்பில் தளபதி தரத்திற்கு உயர்ந்தார்.தன்னுடனும் சிநேகபூர்வமான உறவுகளை தொடர்ந்து வந்தார் எனக் கூறினார்.

பல ஆண்டுகளாக இவ்வாறு உறவு தொடர்ந்து வந்தபோது ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுடன் விடுதலைப் புலிகள் அமைப்பு சமாதான உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொண்டது.அதனைத் தொடர்ந்து அமைதிப் பேச்சுக்கள் வெளிநாடுகளில் நடைபெற்றன.அக்காலப் பகுதியில் கருணாவுடன் வெளிப்படையாகவே இணைந்து பணி புரிவதற்கான வாய்ப்பு கிடைத்தது.

இவ்வாறு சந்திப்புக்களில் ஈடுபடும் வாய்ப்பு கிடைத்த ஒருநாளில் கருணா தன்னுடன் பேசிய சில விடயங்கள் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் அவருக்கு பிரச்சினைகள் இருப்பதை வெளிக்காட்டியது.அக்காலப் பகுதியில் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் அமைதிப் பேச்சுக்கள் இடம்பெற்றன.அந்த பேச்சுக்களின் போது சமஷ்டி முறை தீர்வு ஒன்றுக்கு விடுதலைப் புலிகள் ஒப்புக் கொண்டிருந்தனர்.இந்த விடயத்தை அப்போது விடுதலைப் புலிகளின் அமைதிப் பேச்சுக் குழுவினர் தலைவர் பிரபாகரனிடம் ஆலோசிக்காமல் அறிவித்திருந்தனர்.

இந்த ஒப்புதல் அளிக்கப்பட்ட பின்னர் வன்னிக்கு திரும்பிய விடுதலைப் புலிகளின் அமைதிப்பேச்சுக் குழுவினர் அந்த அமைப்பின் தலைவர் பிரபாகரனிடம் பேச்சுக்களில் நடைபெற்ற விடயங்களை எடுத்துக்கூறினர்.அப்போது சமஷ்டித் தீர்வுமுறை ஒன்றுக்கு ஒப்புக்கொண்டதாக ஏன் அறிவித்தீர்கள் என்று பேச்சுக் குழுவின் தலைவரான அன்ரன் பாலசிங்கத்திடம் பிரபாகரன் கேட்டிருக்கிறார்.அதற்கு அவர் கருணா மற்றும் பேச்சுக் குழுவினர் தனக்கு அழுத்தம் தந்தார்கள்.அதனால்தான் அதற்கு தான் இணங்கியதாக கூறியுள்ளார்.

அதற்கு கருணாவை பார்த்து பிரபாகரன் நீயும் மாத்தையா போல மாறப்போகிறாயா? என்று கேட்டிருக்கிறார்.மாத்தையா என்ற சொல் பிரபாகரனிடமிருந்து வந்த மாத்திரத்திலேயே தனக்கு ஆபத்து என்பதை உணர்ந்த கருணா உடனடியாகவே மட்டக்களப்புக்கு வந்து சேர்ந்து விட்டார்.மட்டக்களப்பில் என்னை சந்தித்து விடயத்தை விளக்கமாக கூறினார். நானும் ரணில் விக்கிரமசிங்க அரசுக்கு இதனை தெரியப்படுத்தியதாக அலிசாஹீர் தெரிவித்துள்ளார்.

ஆனால் ரணிலின் அரசோ இதனை முக்கிய விடயமாக பார்க்கவில்லை. விடுதலைப் புலிகளின் வன்னித்தலைமை சக்தி வாய்ந்தது என்றும் கருணாவை அரசு தரப்புக்கு கொண்டுவருவதனால் எதுவும் நடைபெறாது என்றும் கருணா முக்கியமான ஒரு நபர் இல்லை என்றும் தெரிவித்தது. ஆனால் தனக்கு அது புரிந்தது. உடனடியாகவே கருணாவை பாதுகாப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டதாக தெரிவித்துள்ளார்.

கருணா விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து விலக்கப்பட்டவுடன் வன்னியிலிருந்து விடுதலைப் புலிகள் போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவின் உதவியுடன் ஆயுதங்கள் எதுவுமின்றி கிழக்குக்கு வந்தார்கள். வெருகல் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் கருணா குழுவினருக்கும் இடையில் சண்டை மூண்டது.என்னை தொடர்பு கொண்ட கருணா போர் ஆரம்பித்துவிட்டதாக கூறினார்.

சண்டையை கைவிட்டு பின்வாங்குமாறு அவரிடம் கூறினேன்.அவரும் அங்கிருந்து தப்பி தொப்பிகலக் காட்டுப்பகுதிக்கு சென்றார்.நான் அங்கு சென்று அவரை அழைத்துக் கொண்டு ஏப் ரல் 12ஆம் திகதி கொழும்புக்கு சென்றேன். ஆயுதங்கள் எதுவுமின்றி சாதாரண பயணிகள் போல வாகனத்தில் சென்றதால் வரும்வழியில் சோதனைச் சாவடியில் எந்த பிரச்சினையும் இருக்கவில்லை.

கொழும்புக்கு அழைத்துச் சென்ற கருணாவை முதல்நாள் ஜெய்க் ஹில்ட்டன் ஹோட்டலில் தங்கவைப்பதற்கு சகல ஏற்பாடுகளையும் மேற்கொண்ட நான் இது விடயம் சம்பந்தமாக சமாதான செயலக பணிப்பாளர் பேர்னாட் குணதிலக்கவிடம் எடுத்துக்கூறி கருணாவை அவரிடம் பொறுப்பளித்ததாக கூறினார்.தான் வெறுமனே டக்ஸி ஒட்டுநர் வேலை மட்டும் பார்க்கவில்லை.பொறுப்புடன் இந்த விடயத்தை செய்து முடித்ததாக பெருமிதத்துடன் தெரிவித்துள்ளார்.

அதற்குபின்னர் தனது உயிருக்கு ஆபத்து ஆரம்பித்தது.ஆனால் அது தொடர்பில் ஐக்கிய தேசிய கட்சி எந்த பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளவில்லை.மௌலானா என்னிடம் கேட்டு இந்த காரியத்தை செய்யவில்லை.ஆகவே அவரது பாதுகாப்புக்கு நாம் ஒன்றும் செய்யமுடியாது என்று கூறி ரணில் விக்கிரமசிங்க கைவிரித்துவிட்டார்.

இதனையடுத்து தான் வெளிநாடு செல்லவேண்டியிருந்தது.மகிந்த ராஜபக்ஷ எனது நீண்ட கால நண்பர்.இன்று அவர் நாட்டு மக்களின் தலைவர், படை நடத்திய தளபதி என்றவகையில் பொன்சேகாவின் பணியை தான் மதிப்பதாகவும் தெரிவிக்கிறார்.

ஆனால் சிறுபான்மையின மக்கள் தொடர்பாக அவர் வெளியிட்ட கருத்துக்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவை.மகிந்த ராஜபக்ஷவின் தலைமையே நாட்டில் போரை வென்றது.அவரது தலைமையின் கீழ் பணிசெய்து நாட்டில் அமைதியை கொண்டுவர வேண்டும் எனவும் அறைகூவல் விடுத்துள்ளார். (ச-5)


பாலராஜ் சமூக வலுவூட்டல் நிறுவனம்

புதிய தொழிற்பயிற்சிகள்

ஆண்,பெண்களுக்கான தையல், அழகுக்கலைப் பயிற்சி மணப் பெண் அலங்காரம், கேக் ஐசிங் தயாரித்தல், நவீன ரக அலங்காரப் பொருட்கள் தயாரித்தல், மோட்டார் றீ வைண்டிங், வீட்டு மின்னிணைப்பு , தையல் இயந்திரம் திருத்துதல்,
கணனிப் பயிற்சிகள்: (Micro Soft Office , Desktop publishing)

ஆரம்பம்:-01,03.01.2010

சாரதிப்பயிற்சி:
சகல வாகனங்களும் ஓட்டுவதற்கான பயிற்சியும்அனுமதிப்பத்திரமும் (குறைந்த கட்டணத்தில்) வழங்கப்படும்.

பயிற்சி நிறைவில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்,உதவிப்பணம் வழங்கப்படும்

249,நாவலர் வீதி,யாழ்ப்பாணம்.
T.P:-0779789341



வாழ்த்துகின்றோம்



125/4, ஏ.வி.றோட், அரியாலையைச் சேர்ந்த சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் பழைய மாணவியான

செல்வி குணரத்தினம் கார்த்திகா

16.12.2009 புதன்கிழமை சட்டத்தரணியாக உயர் நீதிமன்ற நீதியரசர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்ததை முன்னிட்டு எங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் சட்டத்துறையில் மேலும் பிரகாசிக்க எமது ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

செ.பத்மநாதன் குடும்பம்
உரும்பிராய்

(147)



மீண்டும் யாழ்.மண்ணில்!

உங்கள் அழகை ஆரோக்கியமான, பாதுகாப்பான முறையில் மெருகூட்ட, அனுபவம் மிக்க அழகியல் நிபுணர்களைக் கொண்டு
திருகோணமலை Posh, Ramaz-Colombo
அழகுக் கலை நிபுணர்கள் மீண்டும் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளனர்.இவர்களின் ஒரு நாள் பயிற்சிப்பட்டறை 02.01.2010 அன்று கலைத்தூது கலையகம், திருமறைக்கலாமன்றம், 128,டேவிட் றோட், யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

கட்டணம் 2000/=

மேலதிக விபரங்களுக்கு:- 077 3053242 , 026 2224524

(155)



வீடு விற்பனைக்கு

நாயன்மார்கட்டு ஆஸ்பத்திரி முன்னொழுங்கையில் 2 பரப்பில் அமைந்துள்ள சகல வசதிகளுடனும் கூடிய வீடு உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :0718474270

(144)



பொருளியற் கல்லூரி

நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
கே.கே.எஸ். றோட், இணுவில்.

இரு இடத்தில்

அண்மையில் வெளிவந்த A/L பரீட்சையில் அதிஉயர் பெறுபேறு பெற்ற அனைத்து மாணவர்களையும் வாழ்த்தி...!

ஆரம்பமாகின்றது

A/L 2012

கலை, வர்த்தகப்பிரிவு

ஜனவரி-02இல்

Note:- எமது மற்ற நிறுவனமான BARATHY சித்தன்கேணியில்
அங்கும் இதே நாளில் ஆரம்பமாகின்றது. உங்கள் அனுமதிகளை விரும்பிய இடங்களில் பெற்றுக் கொள்ளவும்.

# இன்று ஒரு தகவல்

## மூன்று வடிகால்கள்

ஒருத்தர் மிகவும் கவலையுடன் இருந்தார். "எதற்காகக் கவலைப்படுகிறீர்கள்?" என்று கேட்டேன். "முயற்சி திருவினையாக்கும்" என்று சொல்கிறார்கள். என்னுடைய வாழ்க்கையில் "பல தடவைகள் முயற்சி செய்து பார்த்துள்ளேன். ஆனாலும் எதிர்பார்த்தளவுக்கு வெற்றி கிடைப்பதில்லை" என்றார்.

இதற்கு என்ன காரணமாக இருக்கும் என்று நானும் யோசித்துப் பார்த்தேன். பெரியவர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? நம்மிடமிருக்கும் ஆற்றல் குறைந்து போவதற்குக் காரணம் நம்மிடமுள்ள மூன்று பண்புகள் தான் என்று சொல்கிறார்கள்.

அது என்ன மூன்று பண்புகள்?

கோபம் –ஆசை–பொறாமை இது மூன்றும் தான் அது. நம்மிடமுள்ள சக்தி இப்படியான பண்புகளால் வடிந்து போகிறது. அதனால் நமது முயற்சிகளில் தோல்வி வந்து சேர்கிறது.

ஞானாசிரியர்கள் இப்படி வடிந்து போகும் வடிகால்களை மூன்று விதமாகப் பிரிக்கிறார்கள்.

**முதல் வடிகால் :** கடந்த காலத்தையே நினைத்துக் கொண்டிருப்பது.

நன்றாகப் படிக்கும் மாணவனொருவன் பரீட்சை எழுதும் போது நாம் முதலாவதாக வரத் தேவையில்லை. எப்படியோ தேர்ச்சியடைந்தால் போதும் என்று நினைக்கிறான்.

ஏன் அப்படி நினைக்கிறான்? நான் இதுவரைக்கும் எந்த வகுப்பிலும் முதல் மார்க் வாங்கியதில்லை.

இப்ப மட்டும் அது எப்படி முடியும்? என்று நினைக்க ஆரம்பித்து விட்டான். அதுதான் காரணம்.

இப்பொழுது கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்.

அதாவது கடந்த காலத்தின் தோல்விகள்... அல்லது மிகச்சாதாரணமான சாதனைகள்..... அவனுடைய ஞாபகத்துக்கு வந்து அவனைப் பலவீனமாக்கி விட்டது.

**இரண்டாவது வடிகால்:** எதிர்காலத்தைப் பற்றியே எப்பொழுதும் கனவு கண்டு கொண்டிருப்பது.

இதனால் என்ன நடக்கிறது என்றால்... சிலசமயம் நம்முடைய முயற்சிகள் நம்முடைய சக்தியையும் மீறியதாக இருந்துவிடுகிறது.

இதற்கு உதாரணம் – எப்பொழுதும் வகுப்பில் முதலாவதாக வரும் ஒரு மாணவன் இந்த முறை மாவட்டத்திலேயே முதலாவதாக வரவேண்டும் என்று நினைத்துக் கொண்டு தன்னுடைய எல்லைகளை மீறி முயற்சிக்கிறான். பரீட்சை மண்டபத்துக்கு வருவதற்குள் அவனுடைய உழைப்பு எல்லை மீறிப் போய் விடுகிறது. தெளிவாகக்கூட சிந்திக்க முடியவில்லை. வழக்கமாக கிடைக்கும் புள்ளிகள் கூட கிடைக்காமல் போய்விடுகிறது. நம்முடைய முயற்சிகளில் அளவுக்கு மீறிய எதிர்காலக் கவலைகள் இடம்பெறுவது நமக்கு ஏமாற்றத்தையே அளிக்கும்.

**மூன்றாவது வடிகால்:** நிகழ்காலத்தில் நடப்பவற்றை நிலையானதாக நினைத்து அதையே கவனித்துக் கொண்டிருப்பது.

இதனால் என்ன நடக்கிறது என்றால் அவனுடைய சக்தி முழுவதும் அவ்வப்போது நடப்பதை சமாளிப்பதிலேயே செலவாகிவிடுகிறது.

ஆக... மூன்று வடிகால்கள் மூலமாக நம்முடைய சக்தி வீணாகிப் போய்விடுகிறது என்கிறார் சுவாமி சின்மயானந்தர்.

**ஒன்று**–கடந்த காலத்தை நினைத்துக் கொண்டே நம்மை நாமே தாழ்த்திக் கொள்வது.

**இரண்டு**– எதிர்கால முயற்சிகளை அளவுக்கு மீறி திட்டமிட்டு ஏமார்ந்து போவது.

**மூன்று**– நிகழ்காலத்தில் நமது முயற்சிகளை வரிசைப்படுத்திக் கொள்ளாமல் குழம்பிப் போய்விடுவது.

இந்தக்காரணங்களால் தான் நமது முயற்சிக்குப் பலன் கிடைக்காமல் போய்விடுகிறது என்கிறார் அவர்.

இதை நன்றாகப் புரிந்து கொண்டு நம்மைக் கொஞ்சம் திருத்திக் கொண்டால் நமது முயற்சிகளுக்கு முழுப் பலனும் கிடைக்கும்.

ஒரு பையன் அம்மாவிடம் சொன்னான்:

'அந்த வாத்தியாரிடம் நான் படிக்கமாட்டேன்' என்றான்.

'ஏன்' என்று கேட்டார் அம்மா.

'அவரிடம் படித்தவர்கள் யாரும் முன்னுக்கு வந்ததில்லை' என்றான்

'அது எப்படி உனக்குத் தெரியும்?' என்றார்.

'அப்பா அவரிடம் தானே படிச்சவர்' என்றான் அவன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# "கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்கான பிரஜைகள் சமூகம்" புதிய அமைப்பு உதயம்

(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்கான பிரஜைகள் சமூகம் என்னும் அமைப்பு உதயமாகியுள்ளது.

யுத்த அழிவு, இடப்பெயர்வு, குடும்ப உறுப்பினர்களின் இழப்புக்களில் இருந்து மீள எழும் கிளிநொச்சி மக்களின் வாழ்வுக்காகவும் கிளிநொச்சியை மீளக்கட்டியெழுப்பும் அமைப்பாகவும் இவ்வமைப்பு உருவாகியுள்ளது.

கிளிநொச்சியில் வாழும் மக்களுடனும், புலத்தில் வாழும் மக்களின் உதவியுடனும் இவ்வமைப்பு ஏனைய அரச, அரச சார்பற்ற நிறுவனங்களையும் இணைத்து தனது பணியை ஆரம்பிக்கவுள்ளது.

கிளிநொச்சியின் மீள்எழுச்சியில் மக்களின் சொத்துக்கள் சூறையாடப்படுவதை உடன்நிறுத்துதல், எல்லா மக்களையும் வேகமாக மீளக்குடியமர்த்தல், சிறையிலே வாடும் உறவுகளை விரைவாக விடுவித்தலுடன் கிளிநொச்சி பிரதேச சபையை நகரசபையாக்குதல், யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தை உடன் செயற்பட வைத்தல்,திறந்த பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரி, தேசிய கல்வி நிறுவனம் ஆகியவற்றின் கிளைகளை நிறுவி கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்தல், மீளக் குடியேறும் மக்களுக்கான வாழ்வாதாரத் திட்டங்களை முன்னெடுத்து இழப்பீடுகளைப் பெற்றுக்கொடுத்தல் ஆகிய பணிகளும் துரிதப்படுத்தப்படவுள்ளது.

கடந்த 13 ஆம் திகதி முதல் இவ்வமைப்பு செயற்படத் தொடங்கியுள்ளது.

இதன் தலைவராக முன்னாள் கிளி. முல்லை பிராந்திய ஆணையாளர் சு. தர்மரத்தினம், உபதலைவராக கிளி. முல்லை மறைக்கோட்ட முதல்வர் வண. பிதா பென்ற், செயலாளராக இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி மாவட்டக் கிளையின் செயலாளரும், அதிபருமாகிய சி. ஸ்ரீதரன், உபசெயலாளராக அ. வேழமாலிகிதன், பொருளாளராக கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கத் தலைவர்நா.வை. குகராஜா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப. அரியரத்தினம், சமூக சேவைகள் உத்தியோகத்தர் பொன். நித்தியானந்தம் உட்பட 10 பேர் இயக்குநர் சபை உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வமைப்பின் சுதந்திரமான, தனித்துவமான காப்பாளர்களாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன், வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் ரி. இராசநாயகம், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி, கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த. குருகுலராஜா, கொழும்பு றோயல் கல்லூரியின் பிரதி அதிபர் மா. கணபதிப்பிள்ளை ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக இவ்வமைப்பின் செயலாளர் சி. ஸ்ரீதரன் தெரிவித்துள்ளார். (ஓ)

# மாற்று வலுவுடையோர்களுக்கான திறன் வெளிப்பாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். வலுவிழந்தோர்.புனர்வாழ்வுச் சங்கத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மாற்று வலுவுடையோர்களிடமிருந்து பல்வேறு போட்டிகள் மற்றும் கலைநிகழ்வுகள் என்பவற்றுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் மாற்றுவலுவுடையோர்கள் தங்களது விண்ணப்பங்களை அலுவலகத்தில் பெற்று சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் ஜனவரி மாதம் 20 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதான போட்டியாயின் ஒருவர் 3 போட்டிகளில் மட்டுமே பங்குபற்ற முடியும் என்பதுடன் விரும்பின் ஏனைய போட்டிகளில் ஒரு போட்டியையும் தெரிவு செய்து கொள்ளலாம்.

போட்டிகள் பற்றிய விபரம் வருமாறு,

**பிரதான போட்டிகள்**

என்வலப் ஒட்டுதல், தையல், கேக் ஐசிங் தயாரித்தல், மாலை கட்டுதல், சித்திரம் வரைதல், கோலம் போடுதல், சங்கீதம், நடனம், கவிதை, ஆய்வுக் கட்டுரை, திருக்குறள் மனனம் செய்தல், சிறுவர் விளையாட்டு, விளக்குமாறு தயாரித்தல், கதிரை பின்னுதல், விநோதஉடை, தலை அலங்காரம், கைப்பணி வேலை.

**ஏனைய போட்டி**

துவிச்சக்கர வண்டி ஓட்டம், முச்சக்கர வண்டி ஓட்டம்.

அத்துடன் போட்டி பற்றிய விதிமுறைகளையும் மேலதிக விபரங்களையும் 021 321 7718 எனும் அலுவலக தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி ந. சிவராஜா தெரிவித்துள்ளார். (ஓ-6)

# இராசி பலன்

*29-12-2009*
*(மார்கழி 14 செவ்வாய்க்கிழமை)*
*துவாதசி காலை 7.01 மணிவரை*
*திரயோதசி பின்னிரவு 5.38 மணிவரை*
*கார்த்திகை முற்பகல் 11.41 மணிவரை*
*இராகுகாலம் 3.28 - 4.58 மணிவரை*
*சுபநேரம் 10.58 - 12.28 மணிவரை*
*பிரதோஷ விரதம், கெற்போட்ட ஆரம்பம்*
*சித்தாமிர்தம்*

| | |
|---|---|
| மேடம் | பித்தரோகம், மனோசங்கடம், போசன சுகக்குறைவு, முயற்சி தாமதம். |
| இடபம் | வெகுமானம், சிந்தனை மிகுதி, கடின முயற்சி, நண்பர்கள் சந்திப்பு. |
| மிதுனம் | பிறருக்கு உதவி செய்தல், குடும்பக் கவலை, காரிய அலைச்சல், சுபசெலவு. |
| கடகம் | தனதானிய சேர்க்கை, குடும்ப மகிழ்ச்சி, எடுத்த காரியம் கைகூடும், போசன சுகம். |
| சிங்கம் | பிரபுத்தனம், தடைப்பட்ட காரியம் கைகூடும், பிறர் உதவி, தேகநலன். |
| கன்னி | உத்தியோக பங்கம், எதிர்பாராத செலவு, பயணம், தேவையற்ற பயம். |
| துலாம் | வேலைச்சுமை, மனக்கவலை, ஆரோக்கியக்குறைவு, தொழில் நன்மை. |
| விருச்சிகம் | மனோதைரியம், சென்ற இடத்தில் செல்வாக்கு, விருந்துபசாரம், களஸ்திரநன்மை. |
| தனுசு | தடைப்பட்ட காரியம் கைகூடும், வேலைச்சுமை, போசன சுகம், நண்பர்கள் உதவி. |
| மகரம் | பணக்குறைவு, புத்திரரால் கவலை, முயற்சி தாமதம், பூர்வ புண்ணிய கருமம். |
| கும்பம் | மனச்சஞ்சலம், பெரியோர் உதவி, தொழில் சிந்தை, சுபசெலவு. |
| மீனம் | கூட்டுமுயற்சி, பிரயாண நன்மை, நற்கீர்த்தி, வாக்கு மேன்மை. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 170 | 120 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 260 | 300 | 240 |
| தக்காளி | 130 | 140 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 70 | 80 | 80 |
| கரட் | 80 | 100 | 100 |
| பூசணி | 60 | 80 | 40 |
| புடோல் | 120 | 140 | 50 |
| வாழைக்காய் | 50 | 70 | 50 |
| சின்ன வெங்காயம் | 130 | 140 | 140 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 80 |
| பாகற்காய் | 240 | 280 | 150 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 50 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 240 | 260 | 140 |
| லீக்ஸ் | 140 | 160 | 120 |
| பீற்றூட் | -- | -- | -- |
| கறிமிளகாய் | -- | -- | -- |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 250 | 240 | 140 |
| கத்தரி தம்புள்ள | 140 | 160 | -- |
| கீரை – 1 பிடி | 40 | 50 | 30 |
| தேசிக்காய் | 140 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 40 | 35 |



ஹேலீஸ் நிறுவனக் காட்சியறை நேற்று ஸ்ரான்லி வீதியில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி நாடா வெட்டி திறந்துவைப்பதையும், யாழ். வர்த்தக சங்கத்தலைவர் ஆர்.ஜனக்குமரன் மங்கல விளக்கேற்றுவதையும், ஹேலீஸ் நிறுவனப் பணிப்பாளர் எம்.ரிசிவ்சஹிட் உரையாற்றுவதையும், விருந்தினர்கள் காட்சியறையைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள் :-அலுவலக செய்தியாளர்)

## மணிவாசகர் விழா இரண்டாம் நாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மணிவாசகர் சபையின் ஆதரவில் நடத்தப்பட்டு வரும் 55 ஆவது ஆண்டு மணிவாசகர் விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை மாலை 2 மணிக்கு ஈழத்து சிதம்பர தேவஸ்தான வசந்த மண்டபத்தில் காரைநகர் மணிவாசகர் சபை பரீட்சைச் செயலாளர் க.தில்லையம்பலம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் "திருவாசகத்துள் திருவெம்பாவை" என்னும் விடயம் பற்றி மணிவாசகர் சபை உபதலைவர் சித்தாந்த வித்தகர் வே. நடராசா சொற்பொழிவாற்றவுள்ளார். (ஓ-4)

## திருவாசக விளக்கவுரை

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் திருவருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோயிலின் திருவாசக விளக்கவுரை விஞ்ஞாபனம் எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் "அனுபவவழி அறியாமை" என்னும் தலைப்பில் மெய்ஞ்ஞான விளக்கவுரையை வெள்ளவத்தை இந்துசமய கலை கலாசார பணியக உதவிச் செயலாளர் க.சிவசுப்பிரமணியம் நிகழ்த்தவுள்ளார். (ஓ-4)

## சிறப்புச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

சிவலிங்க யோக கேந்திரா நிலையத்தினால் திருவெம்பாவை காலத்தை முன்னிட்டு நடத்தப்படும் சிறப்புச் சொற்பொழிவு எதிர்வரும் 1ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 11மணிக்கு அச்செழு மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் நிலையத்தலைவர் நா. நவராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் "திருவாசகம் என்னும் தேன்" என்னும் பொருளில் கவிமணி அன்னைதாசன் சொற்பொழிவாற்றவுள்ளார். (ஓ-4)

## சகல அதிபர்களுக்குமான அறிவுறுத்தற் கூட்டம்

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயத்தின் 2010 ஆம் ஆண்டிற்கான வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பான சகல அதிபர்களுக்குமான அறிவுறுத்தற் கூட்டம் நாளை புதன்கிழமை முற்பகல் 8.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணிவரை புலோலி மெ.மி.த.க பாடசாலையில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கலந்துகொள்ளும் அதிபர்கள் பாடசாலை நாட்காட்டி, நேரசூசி, வசதிகள் சேவை கட்டண வரவு செலத்திட்டம், பாடசாலை அபிவிருத்திச் சங்க வரவுசெலவுத்திட்டம், தரஉள்ளீடு, உயர்கலை செயற்பாடு, உலக உணவுத்திட்டம், ஐந்தாண்டுத்திட்டம், இடம்பெயர்ந்த மாணவர்கள்,ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் பற்றிய விபரம் புதிய மாணவர் அனுமதி தரம் 1,6,12 மாணவர்கள், ஆசிரியர்கள் எண்ணிக்கை (நிரந்தரம்) ஆகிய ஆவணங்களை தவறாது கொண்டு வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (ஓ-4-19)

### குப்பை கூழங்கள் கொட்டப்படுவதால்

## கோம்பையன்மணல் மயான பகுதியில் பெரும் சுகாதார சீர்கேடு

(பொன்னாலை)

வண்ணை கோம்பையன் மணல் இந்து மயானப்பகுதிக்கு அருகிலுள்ள வீதியில் குப்பை- கூழங்கள் மற்றும் கால்நடை எச்சக் கழிவுகள் கொட்டப்படுவதால் அப்பகுதி துர்நாற்றம் வீசுகின்றது.

தினமும் கொட்டப்படும் இக்கழிவுகளால் தொற்று நோய் ஏற்படும் அபாயமிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

குறிப்பாகப் பாடசாலை மாணவர்கள் , கல்வி நிலையங்களுக்குச் செல்லும் மாணவர்கள், மாலை வேளைகளில் இவ் வீதியைப் பெருமளவில் பயன்படுத்தி வருகின்றனர். இவர்கள் பெரும் சுகாதார நெருக்கடிகளை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இப்பகுதியில் குப்பைகள் மற்றும் விலங்கு எச்சக் கழிவுகள் கொட்டப்படுவதைத் தடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (ஓ-49)

## நல்லைநகர் வீதியெங்கும் உல்லாசப் பிரயாணிகள்

(யாழ்ப்பாணம்)

தற்போது நல்லைக் கந்தன் ஆலய வீதியில் தென்னிலங்கை உல்லாசப் பிரயாணிகள் பெருமளவில் காணப்படுகின்றனர்.

வீதியோரங்கள் எங்கும் பஸ்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதோடு பெருமளவு உல்லாசப் பிரயாணிகள் நல்லூர்க் கந்தனை வழிபடுவதையும் காணக்கூடியதாகவுள்ளது.

அத்தோடு விடுதி வசதிகள் யாழ்.குடாநாட்டில் குறைவாக உள்ளதால் தங்குமிட வசதிகள் இன்றி வாகனங்களிலும், நல்லூர் வீதியிலும் தங்கி இளைப்பாறுவதையும், உணவு சமைத்து உண்பதனையும், உறங்குவதையும் காணக்கூடியதாகவுள்ளது.

இதேவேளை இவ்வாறு உல்லாசப் பயணிகளின் திடீர் பெருக்கத்தை வீதியில் செல்லும் மக்கள் வியப்புடன் பார்த்துச் செல்வதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. (ஓ-2)

## மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் பெண்களுக்கான கருத்தரங்குகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மகளிர் அபிவிருத்தி நிலையம் வீட்டு வன்முறையால் பாதிக்கப்படும் பெண்கள் அவற்றிலிருந்து பாதுகாப்பைத் தேடிக் கொள்ளும் வகையில் கிராமிய மட்டத்தில் பெண்களுக்குப் பல கருத்தரங்குகளை நடத்தி வருகின்றது.

அந்த வகையில் இன்று செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி மகளிர் தையல் பயிற்சி நிலைய மாணவர்களுக்கு "வீட்டு வன்முறையும் பெண்களும்" என்ற தலைப்பில் சாவகச் சேரி தையல் பயிற்சி நிலையத்தில் கருத்த ரங்கு ஒன்று நடத்தப்படவுள்ளது.

இக்கருத்தரங்கில் பெண்கள் தமக்கு பாதுகாப்புத் தேடித்தரும் சட்டங்கள் பற்றி அறிந்திருக்க வேண்டியதன் முக்கியத்துவம் தொடர்பாக கருத்துக்கள் பரிமாறப்படவுள்ளன.

அத்துடன் வீட்டு வன்முறைச்சட்டம் தொடர்பாகவும் பெண்கள் பாதுகாப்புத் தொடர்பாகவும் நடைமுறையில் உள்ள சட்டங்கள் பற்றி விரிவாக ஆராயயப்படவுள்ளது. இதில் மகளிர் அபிவிருத்தி நிலைய பணிப்பாளர் திருமதி சறோஜா சிவச்சந்திரன், தென்மராட்சிப் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர், திருமதி கமலலோஜினி பிரணவன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (ஓ)

## இன்றைய காலநிலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இன்று மப்பும் மந்தாரமான கால நிலையுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளதாக திருநெல்வேலி வளிமண்டல ஆராய்ச்சித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை மத்திய மலை நாடு, கிழக்கு மாகாணம் ஆகிய இடங்களில் மழை தொடர்வதாகவும் அது நீடிக்கும் சந்தர்ப்பம் உள்ளது என்றும் கொழும்பு வளிமண்டல ஆய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஓ-2)

## டெங்குநோய் தொடர்பான விழிப்புணர்வு பிரச்சாரம்

(பொன்னாலை)

மூளாய், பொன்னாலை மற்றும் தொல்புரம் ஆகிய பகுதிகளில் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்களும், அப்பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகரும் இணைந்து டெங்கு நோய் விழிப்புணர்வு பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த பகுதிகளிலுள்ள வீடுகளுக்குச் செல்லும் சுகாதார உத்தியோகத்தர்கள், மக்கள் மத்தியில் டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வுகளை எடுத்துக்கூறி வருவதுடன், நுளம்புகளைக் கட்டுப்படுத்துவதற்கான தூவல் மருந்துகளையும் விசிறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-49)

## பஞ்சரத பவனி

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி – தனுவோடைப்பதி அருள்மிகு ஸ்ரீ சிவாகமசுந்தரி சதேம ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் ஆலய திருவெம்பாவை அலங்கார உற்சவத்தில் பஞ்சரதம் பவனிவரும் காட்சி நாளை மறுநாள் வியாழக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

அன்று 8 மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம்பெற்று 9 மணிக்கு விநாயகர், நடராஜர், சிவகாமி, முருகன்,மாணிக்கவாசகர் முதலான மூர்த்தங்கள் 3ஆம் திருவீதியில் தேரில் ஆரோகணிக்கவுள்ளனர்.

மறுநாள் வெள்ளிக்கிழமை அதிகாலை 4 மணிக்கு நடராஜரபிஷேகமும் அதனைத் தொடர்ந்து ஆருத்திராபிஷேகம் என்பன இடம் பெறவுள்ளன. (ஓ)

## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய "செவிநுகர் கனிகள்" நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 2ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் வழங்கவுள்ளதுடன், வாழ்த்துரையை சுன்னாகம் ஸ்கந்த வரோதயாக் கல்லூரி அதிபர் ஆறு. திருமுருகன் வழங்கவுள்ளார். நூல் வெளியீட்டுரையை திருநெல்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலை அதிபர் என்.விஜயசுந்தரம், நூல் அறிமுக வுரையை கோப்பாய் ஆசிரியகலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன், நயப்புரையை யாழ்.பல்கலைக்கழக வணிகத் துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி வேல்நம்பி ஆகியோர் வழங்கவுள்ளனர். (ஓ-4)




## உலக வங்கியின் நிதியுதவியுடன் தென்மராட்சிப் பிரதேசத்தில் 286வீடுகள் அமைக்கத் திட்டம்

(பொன்னாலை)

உலக வங்கியின் நிதியுதவியுடன் தென்மராட்சிப் பிரதேசத்தில் 286 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன என்று பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

இவ் 286 வீடுகளும் தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள தெரிவு செய்யப்பட்ட 9 கிராம அலுவலர் பிரிவுகளில் நிர்மாணிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மீசாலை வடக்கு, நுணாவில் மேற்கு, மண்டுவில், இராமாவில் , மட்டுவில் தெற்கு , சரசாலை வடக்கு, நாவற்குழி மேற்கு , சாவகச்சேரி வடக்கு, நுணாவில் கிழக்கு ஆகிய ஒன்பது கிராம அலுவலர் பிரிவுகளிலேயே மேற்படி வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-49)

Hutch

# யாழ்ப்பாணத்தில் நாங்கள்!



இப்பொழுது Hutch வலையமைப்பு
யாழ் குடாநாட்டில் அமைந்துள்ள
யாழ்ப்பாணம், சாவகச்சேரி மற்றும் புலோலி
ஆகிய நகரங்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது.

www.hutch.lk

0785 785785

# பிறந்த எண் பலன்களும் அதிர்ஷ்ட பெயர்களும்

## உடல் எண் : 7 விதி எண் : 7

### உடலமைப்பு

பிறந்த எண், விதி எண் இரண்டுமே 7 ஆகக் கொண்டவர்கள் கேதுவின் முழு ஆதிக்கத்திற்குட்பட்டவராவர். இவர்கள் உயரமானவர்களாகக் காணப்படுவர். முகம் கவர்ச்சியாக இருக்காது. எப்போதும் எதையோ பறிகொடுத்தவர் போல களையிழந்து காணப்படுவர்.

### மன, குணவியல்பு

இவர்கள் நல்ல மனம், குணம் கொண்டவர்கள். பிறருக்கு மனதாலும் சிறு தீங்கும் எண்ணமாட்டார்கள். எந்தச் சமயத்திலும் பிறருக்குத் தீங்கு செய்ய மாட்டார்கள்.

தம் மனதிலுள்ள வேதனைகளை ஒருவரிடமும் வெளியிடவும் மாட்டார்கள். தம்முள்ளேயே எண்ணிப் புழுங்கக் கூடியவர்களாக இருப்பர்.

இதனால் தான் மனநிலை, ஆரோக்கியம் கெடுகிறது என்றுகூட எண்ணிப் பார்க்க மாட்டார்கள்.

ஆனால் இவர்கள் மனத்தூய்மை மிக்கவர்கள். இவர்கள் உடையும் தூய்மையானதாகவே இருக்கும்.

பெரும்பாலும் அமைதியையும் தனிமையையும் நாடுபவர்களாக இருப்பர். இவர்களிடம் பிடிவாத குணம் இருக்கும்.

மனதிலுள்ளதை வெளிப்படையாக வெளியிடுவர். மனத்தில் ஒன்று வைத்து பிறர் எவரையும் கெடுக்கும் எண்ணம் இவர்களிடம் காணமுடியாது. பிறர் தவறாக நடந்து கொண்டாலும் அவர்களைக் கண்டிக்க மாட்டார்கள். அவர்களின் தவறுக்காக இவர்கள் வேதனைப்படுவர்.

மனிதர்கள் துன்பத்தை அனுபவிக்கவே பிறந்துள்ளனர் என்பது இவர்களின் கோட்பாடு.

அதனால் தனக்குத்தானே சிந்திப்பர். எப்போதும் சிந்தனையிலேயே மிதந்திருப்பர்.

### குடும்ப வாழ்க்கை

இவர்களுக்கு திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்ற ஆசை இருப்பது கடினம். திருமணம் காலம் கடந்து நடந்தாலும் அது சந்தோஷம் தருவதாக இருக்காது. குடும்ப வாழ்க்கை குழப்பமும் வேதனையும் நிறைந்ததாக இவர்களுக்குத் தெரியும். அதனால் மனைவி, குழந்தைகள் மீது அதிகப் பற்றின்றி, தனிமையை நாடுபவராக இருப்பர்.

ஆனால் இந்த எண்ணுடையவர்களில் சிலர் மட்டும் காமவெறி மிகுந்தவர்களாகவும் தகாத முறையில் ஈடுபட்டு அதனால் பல கேடுகளுக்கு ஆளாகக் கூடியவர்களாகவும் இருப்பர். இவர்களுக்குக்கூட குடும்ப வாழ்க்கை சோபிப்பதில்லை.

### தொழிலும், வருமானமும்

இவர்கள் கற்பனை வளம் மிகுந்தவர்கள் கதை எழுதுவதிலும், காவியம் புனைவதிலும் வல்லவர்களாக இருப்பர். கல்வி கற்றவராயும் அரசு மற்றும் தனியார் துறைகளில் பணி புரிபவர்களாகவும் இருப்பர். இவர்கள் மத்தியஸ்தராகவோ, வழக்கறிஞ்ராகவோ கூட இருக்கக்கூடும்.

இரசாயனம் மற்றும் மருந்துப் பொருட்களைத் தயாரிப்பவரோ, கமிஷன் ஏஜெண்டுகளாக விற்பனை செய்பவராகவோ இருக்கக்கூடும்.

விவசாயம், பயிறு, காய்கறிகள் போன்றவற்றைப் பயிரிடுதல், வியாபாரம் செய்தல் போன்ற ஒன்றில் ஈடுபட்டிருக்கக்கூடும்.

இவர்கள் பெருமளவு பொருள் சம்பாதனை பெறுவர் இருந்தாலும் மன மகிழ்ச்சியும் நிம்மதியும் இல்லாது தவிப்பர்.

### ஆரோக்கியநிலை

இவர்களுக்கு சித்தப் பிரமையும் நரம்புத் தளர்ச்சி நோய்களும் உண்டாகும். முதுகு வலி, மூட்டுவலி, கைகால் பிடிப்பு போன்றவையும் இரத்த அழுத்தம், இருதய சம்பந்த நோய்களும் உண்டாகும். வாய்வு சம்பந்த நோயும் உண்டாகலாம். இவர்களால் நிம்மதியாகத் தூங்க முடியாது.

### சாதக பாதக எண்களும் திகதியும்

இவர்களுக்கு சுக்கிரன், புதன், சந்திரன் ஆதிக்கத்திற்குட்பட்ட 6,5, 2 ஆம் அது தொடர்பிலான யோகமான எண்களுக்கு பெயர் அமைத்துக் கொள்ளலாம்.

தம் நிறுவனங்களுக்கும் 6,5,2 தொடர்பிலான பெயர்களே அதிர்ஷ்டமானவை.

இவர்களுக்கு 6,5,2 தொடர்பிலான எண்களும் திகதியும் யோகமானவை.

ஆனால் செவ்வாய் ஆதிக்கம் பெற்ற 9 மற்றும் அது தொடர்பிலான எண்களும் திகதியும் யோகமற்றவை.

## உடல் எண் : 7 விதி எண் : 8

### உடலமைப்பு

பிறந்த எண் 7 விதி எண் 8 ஆகக் கொண்டவர்கள் கேது, சனியின் ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள் இவர்கள் உயரம் குறைந்து சற்று பருமனாகக் காணப்படுவர். உடல் பலம் கொண்டவர்களாக இருப்பர்.

### மன, குணவியல்பு

மனபலம் கொண்டவர்கள் எத்தனைக் கஷ்டங்கள் வந்தாலும் தாங்கக்கூடியவர்கள். எதையும் தாங்கும் இதயம் இவர்களுக்கு உண்டு.

இவர்கள் மனச்சாட்சிக்குட்பட்டவர்களாக இருப்பர். இவர்கள் எந்த ஒரு செயலைப் புரியும்போதும் அதிலுள்ள நல்லது கெட்டது இரண்டையும் ஆராய்வர். இதனால் எதைச் செய்வது என்று புரியாமல் போராட்டமான நிலைக்கு உள்ளாக நேரும்.

இவர்கள் பிறரிடம் தாராளமாகப் பழகுவர். இவர்கள் எளிதில் கோபத்துக்குள்ளாவர். பிறர் மனம் புண்படப் பேசுவர். அதனால் இவர்களுக்கு எதிர்ப்புகளும் பிறர் வெறுப்புக்கு ஆளாதலும் கூடும்.

ஆனால் எதிர்ப்புகளைக் கண்டு கொஞ்சமும் அஞ்சமாட்டார்கள். வாழ்க்கையில் ஏற்படும் எதிர்ப்புகளையும் போராட்டங்களையும் எதிர்த்தும் போராடும் ஆற்றல் பெற்றவர்கள்.

எதைக் கண்டும் அஞ்சமாட்டார்கள். இருந்தாலும் சில நேரங்களில் தனிமையில் தாம் செய்த தவறுக்காகவும் அதனால் ஏற்பட்ட பாதிப்புக்காகவும்,வேதனைப்படுவர்.

அதனால் சில நேரங்களில் மௌனமாக இருப்பதும் உண்டு. இவர்கள் ஒரு சமயம் இருப்பது போன்று மறுசமயம் இருக்க மாட்டார்கள். மனச் சலனங்களுக்கும் ஆளாவர். இதனால் அமைதி இழந்து தவிக்க நேரும்.

### குடும்ப வாழ்க்கை

இவர்களுக்குத் திருமணம் நடப்பது அரிதாகும். காலங்கடந்து திருமணம் நடந்தாலும் மனமொன்றி வாழ்வது கடினம். குடும்பத்தை விட்டுப் பிரிந்து வாழ வேண்டிய கட்டாயம் ஏற்படும். அதனால் அவர்களுக்கு குடும்ப வாழ்க்கை திருப்திகரமாக அமைவது கடினம்.

### தொழிலும், வருமானமும்

இவர்கள் உழைப்பை நம்பக்கூடியவர்கள். கடுமையாக உழைத்து முன்னேறத் துடிப்பர். கல்வியில் தேர்ச்சியும் சாஸ்திர ஞானமும் கொண்டவர்களாகவும் மருத்துவம், சட்டம் மற்றும் ஜோதிடத் துறையில் ஈடுபாடு கொண்டவர்களாகவும் இருப்பர்.

பொருள் சம்பாதிப்பதில் அதிக ஆர்வமுள்ளவர்கள். அதனால் பலவிதத் தொழில்களில் ஈடுபட்டிருக்கக்கூடும்.

எழுத்தாற்றல், பேச்சாற்றல் பெற்றவர்களாகவும், வண்டி, வாகனம் மற்றும் உலோக தொடர்பிலான தொழில்களில் ஈடுபாடு கொண்டவர்களாகவும் இருப்பர்.

இவர்கள் பெருமளவு சம்பாதிப்பர். வண்டி வாகன வசதி பெற்றுத் திகழ்வர். ஆனால் விரக்தியான நிலையில் வாழ்வர்.

### ஆரோக்கிய நிலை

இவர்களுக்கு இதயவலி மற்றும் இரத்த அழுத்தம் போன்ற நோய்கள் வரக்கூடும்.

வயிறு சம்பந்தமான நோய், மூட்டுவலி, முதுகுவலி, நரம்புத்தளர்ச்சி போன்றனவும் உண்டாகும்.

நீரிழிவு நோய் ஏற்படவும் வாய்ப்புண்டு. அதிகமாக சிந்திக்கும் இவர்களுக்கு சித்தப் பிரமை ஏற்படவும் கூடும்.

### சாதக பாதக எண்களும் திகதியும்

இவர்கள் சுக்கிரன், புதன் ஆதிக்கத்திற்குட்பட்ட 6,5 அது தொடர்பிலானவற்றில் யோகப் பலன் தரும் எண்களுக்கு தம் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

தம் நிறுவனங்களுக்குக்கூட 6,5 தொடர்பிலேயே பெயர் அமைக்க அதிர்ஷ்டமாகும்.

இவர்களுக்கு 6,5 உடன் 2 கூட யோகமான எண்களும் திகதியும் ஆகும்.

ஆனால் செவ்வாய், சனி ஆதிக்கம் பெற்ற 9,8 மற்றும் அது தொடர்பிலான எண்களும் திகதியும் யோகமற்றவை.

(தொடரும்)

# ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் இலங்கை அவசர கடன்

ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் இலங்கை 150 மில்லியன் டொலர் அவசர கடன் கேட்டுள்ளது. இத்தகவலை ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கையின் இயக்குநர் ரிச்சர்ட் வோக்ஸ் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய இலங்கையின் குறித்த கோரிக்கையை வங்கி பரிசீலிக்கும் என்றும் நாட்டின் வடக்குப் பகுதி அபிவிருத்திக்கு முடிந்த பங்களிப்பைச் செய்யும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஏற்கனவே இலங்கைக்கு 350 மில்லியன் டொலர் கடன் வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி அனுமதியளித்துள்ளது.

இது அல்லாது 150 மில்லியன் டொலரை அவசர கடனாக வரும் நாட்களில் வழங்கும் எனத் தெரிகிறது.

ஏற்கனவே இந்தியா ரூ. ஆயிரம் கோடியும், ரூ. ஆயிரத்து 840 கோடியும் வழங்கியுள்ள நிலையில் மேலும் பல கோடி ரூபாய் உதவி தருவதாக இவ்விரு நாடுகளும் இலங்கைக்கு உத்தரவாதம் அளித்துள்ளன என்று செய்திகள் தெரிவிக்கின்றன. (6-2)

# கால்நடைகளை தேடிச் சென்றோர் கைது செய்யப்பட்டு தடுத்து வைப்பு

அம்பாறை மாவட்ட எல்லையில் மேய்ச்சலுக்கு விடப்பட்டிருந்த கால்நடைகளைத் தேடிச் சென்ற 6 தமிழர்கள் நேற்று முன்தினம் மகாஓயா பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

உன்னிச்சை ஆயித்தியமலை மற்றும் வவுணதீவு ஆகிய இடங்களைச் சேர்ந்த இந்நபர்கள் கைதாகி தடுத்து வைக்கப்பட்டுள்ள சம்பவம் தொடர்பாக உறவினர்கள் மாகாண சபை உறுப்பினர் இரா. துரைரத்தினத்திடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

தமது வதிவிட பொலிஸ் நிலையங்களுக்கு அறிவித்த பின்னரே கால்நடைகளை இவர்கள் தேடிச் சென்றிருந்ததாகவும் இரா. துரைரத்தினத்திடம் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய மேற்படி கைது தொடர்பாக மகாஓயா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் தான் தொடர்பு கொண்டதாகவும் சந்தேகத்தின் பேரில் கைதான இந்நபர்கள் விசாரணையின் பின்பு விடுவிக்கப்படுவார்கள் என தனக்கு பதிலளிக்கப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார். (6-2)

## விவாத அரங்கு-04

யாழ். குடாநாட்டில் இந்து ஆலயங்கள் அதிகரித்துவிட்டன

அவற்றைக்

குறைக்க வேண்டும் | குறைக்கக் கூடாது

உங்கள் கருத்துக்களை அனுப்ப வேண்டிய

இறுதித் திகதி 01.01.2010

குறிப்பு:- ஒரு தடவை விவாத அரங்கில் கலந்து கொண்டவர்கள் இன்னொரு விவாத அரங்கில் பங்கேற்பது தவிர்க்கப் பட்டுள்ளது.

## விவாத அரங்கு-03

மாணவர்களின் கல்வி முன்னேற யாழ். குடாநாட்டிலுள்ள சிறிய பாடசாலைகளை பெரிய பாடசாலைகளுடன்

இணைக்க வேண்டும் | இணைக்கக் கூடாது

தீர்ப்பு:-30.12.2009

# பக்தியுடன் இலக்கியச் சுவையும் கலந்தளிக்கும் திருவெம்பாவை



திருவெம்பாவைப் பாடல்கள் மாணிக்கவாசகப் பெருமானால் அருளிச் செய்யப்பட்டவை. தூக்கத்தில் இச்சை கொண்டு படுத்துறங்கும் பெண் ஒருத்தியை அவளது தோழிகள் துயில் நீங்கி ஆலயம் செல்ல அழைப்பதாகப் பாடல்கள் அமைக்கப்பட்டுள்ளன. வெளிப்படையாய் இக்கருத்தே தென்படினும் உள்ளார்த்தமாக நோக்குமிடத்து இறைசிந்தனையை மறந்து, ஆன்மீக வாழ்வை விடுத்து, உலகியல் இன்பங்களில் மூழ்கியிருக்கும் ஆன்மாக்களை அவற்றினின்றும் விடுவித்து பரமாத்மாவுடன் ஒன்றிருக்கச் செய்வதாய் இவை அமைந்துள்ளன.

திருவெம்பாவைப் பாடல்களை நோக்கும் போது பக்திச் சுவைக்கும் மேலாகத் தரமானதோர் இலக்கியச் சுவை காணப்படுவதை மறுக்கவியலாது. மணிவாசகரின் ஒவ்வொரு பாடலிலும் பக்திச்சுவையும், இலக்கியச் சுவையும் போட்டி போட்டுச் சுவைக்கின்றன.

திருவெம்பாவையின் முதற் பாடல், "ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ்சோதி..." என்று சிவனின் பெருமை கூறி ஆரம்பிக்கின்றது. பின்னும், மாலறியா நான்முகனும் காணாமலை, விண்ணுக்கொரு மருந்து, வேத விழுப் பொருள்... இன்னும் பலவாய் இறைபெருமைகள் கூறப்படுகின்றன.

துயின்றிருக்கும் பெண்ணைத் துயில் நீங்கி எழச் செய்வதற்காகப் பாடலில் பயன்படுத்தப்பட்ட உத்திகள் வியக்கத்தக்கது மட்டுமல்ல ; நயக்கத்தக்கதும் கூட. முதலில் துயிலும் பெண்ணை துயில் விட்டெழும்பு எனச் சாதாரணமாக அவள் தோழிகள் எழுப்புகின்றனர். அவள் எழுப்ப்வில்லை. பின், அவள் கூறிய சிலவற்றை அவளுக்கு ஞாபகமூட்டி அவளை எழுப்ப முயல்கின்றனர். 'நீ பாசம் வைத்தது பரஞ்சோதி மேல் தான் என்று எப்போதும் சொல்வாயே. இப்பொழுது இந்தப் படுக்கை மீது தான் நேசம் வைத்து விட்டாயோ? அத்தன், ஆனந்தன், அமுதன் என்று தித்திக்கப் பேசுவாயே, கதவைத் திறந்து வெளியே வா. இன்னமும் உனக்கு விடியலில்லையா?' இப்பொழுதும் அவள் எழுந்திராது, 'தோழிகள் எல்லோரும் வந்துவிட்டனரா? எண்ணிக் கொண்டு வாருங்கள்" என்று கூறிவிட்டு மீண்டும் துயில்கின்றாள். அப்போது தோழிகள், "இன்னமும் துயின்று காலத்தை வீணாக்குகின்றாயே. எல்லோரும் வந்து விட்டார்கள். நீயே வந்து எண்ணிப் பார்த்துவிடு. சிவனே சிவனே என்று ஓலம் இடினும் நீ உணர்கின்றாய் இல்லையே" என்று கூறுகின்றனர்.

இன்னும் அவளை விடுவதாய் இல்லை. முதல்நாள் அவள் சொன்ன வார்த்தைகளை அவளின் நினைவுக்குக் கொண்டு வருகின்றனர். "மானே நீ நென்னலை நாளை வந்துங்களை நானே எழுப்புவன் என்றலும் நாணாமே போன திசை பகராய் இன்னம் புலர்ந்தின்றோ"

நேற்று நீ என்ன சொன்னாய்? நாளை நானே வந்து உங்கள் எல்லோரையும் எழுப்புவேன் என்றாயே. அதை மறந்து வெட்கம் இன்றித் துயில்கிறாயே. இன்னமும் உனக்கு விடியவில்லையா? சொல் என்று அவளது வெட்க உணர்வைத் தூண்டி அவளைத் துயில் நீங்கச் செய்கின்றார்.

பொய்கையில் பெண்கள் நீராடும் அழகை மணிவாசகர் கூறும் போது அப்பொய்கைக்கே எம்மை அழைத்துச் செல்கின்றார். நீரினுள் புகுந்து புகுந்து, நீரைக் கையால் குடைந்து குடைந்து பெண்கள் நீராடுவதை அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றார். ஒரு கலைஞன் அவர் என்பதை நிரூபிக்கும் பல இடங்களில் இதுவும் ஒன்றாகும்.

நீராடும் பொய்கைக்கும் இறைவனுக்கும் அவர் காட்டும் ஒப்புவமை கண்டு நாமெல்லாம் வியந்து போகின்றோம்.

"பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால் அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால் தங்கள் மலங்கழு வுவார் வந்து சார்தலினால் எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த பொங் குமடு..." என வரும் அடிகள் மூலம் ஒப்புவமையை அழகாகக் கூறுகின்றார்.

பொய்கையில் குவளை மலர்கள் மலர்ந்திருக்கின்றன. இறை விழிகளும் குவளைமலராய் விரிந்திருக்கின்றன. இன்னும் செந்தாமரை மலர்கள் பொய்கை எங்கணும் பூரித்து இதழ் பரப்பியிருக்கின்றன. இறை சீரடிகள் செந்தாமரையாய் ஜொலிக்கின்றன. பொய்கையில் எப்போதும் அன்னப் பட்சிகள் விளையாடி மகிழ்கின்றன. இன்னும் பொய்கையில் பாம்பு புகுந்து விளையாடுகிறது. இறைவன் மீதும் அது ஆடி அசைகின்றது. பின்னும், மானிடர் தம் புற அழுக்குகளை நீக்க பொய்கையை நாடுவர். ஆன்மாக்கள் அக அழுக்காம் மலம் நீங்க இறைவனை நாடுவர். என்னே ஒப்புவமை! இத்தகைய ஒற்றுமையை மாணிக்கவாசகர் பொய்கைக்கும், இறைவனுக்கும் கூறியிருக்கும் அழகானது அவரது பக்திக்கும் மேலான இலக்கிய அழகினைப் புலப்பட வைக்கின்றது.

ஈற்றில் இறைவனின் பெருமைகள் கூறிப் போற்றி நிற்கிறார் மணிவாசகப் பெருமான். "போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர் போற்றி அருளகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்..... போற்றியாம் மார்கழி நீராடேலோரெம்பாவாய்" என்று முடிக்கின்றார்.


இவ்வாறெல்லாம் பல சொல்லித் துயில் கொள்ளும் பெண்களைத் தோழியராக நின்று எழுப்புகின்றார். அஃதாவது உலக இன்பங்களில் லயித்திருக்கும் ஆன்மாவை லௌகீக பந்தங்களினின்றும் நீங்கி இறையருளைப் பெற வழிகாட்டுகின்றார்.

**ந. உதயலதா**
**கைதடி வடக்கு,**
**கைதடி.**

இறைவன், இறைவி பெருமை, இயற்கை நிகழ்வுகள், இறைசிந்தனை முதலான பலவற்றாலும் தான் கூறவந்ததை அழகுற ரசனை பொங்கப் பாடுகிறார்.

# ஈழத்துச் சிதம்பரத்தான் திருவடிக்கு...

## இன்று ஏழாம் நாள் உற்சவம்



ஈழத்து சிதம்பரத்துக்கு வரும் அடியார்களுக்கு மஹோற்சவ காலங்களிலும் விஷேஷ தினங்களிலும் 80 வருடங்களுக்கு மேலாக அன்னதானப் பணியை செய்து வருகின்ற மாணிக்க வாசகர் மடாலயம்

## திருவாதிரை விரதப் பேறு

திருவாதிரையிலுணவொழித்துச்
செம்மை மனத்தான் மொழிமெய்யால்
ஒருவா தறங்கள் மிகப் புரிந்தே
யோங்கு நோன்பு மேற்கொண்டு
வருநா ளடியார்க் கமுதளித்து
வண்சோ றுண்ணும் வழக்குடையார்
பெருவாழ்வுற்றுச் சிவனடிக்கீழ்ப்
பிறங்கு வாரா லூழியெலாம்

ஈழத்து சிதம்பர புராணம்

## ஆண்டிகேணி ஐயனுடன் அருள் செய்யும் எங்கள் சிவன்

ஒப்பறிய ஒண்ணாத ஒரு தலைவன் எங்கள் சிவன்
எப்பொழுதும்எமைபாளும்திண்ணபுரத்தீசன்எங்கள்சிவன்
தேமதுரத் தமிழ் என்றால் சிந்தை பறிகொடுப்பான்
மாமதுரைச் சங்கத்தில் மதுரத்தமிழை உண்டிருப்பான்
விரும்பித் துதிப்போர்க்கு வீடளித்து மகிழ்ந்திடுவான்
உருவில் ஒருபாதி உமைக்களித்த எங்கள் சிவன்
அன்புருவாய் அருளுவாய் எழுந்தருளி அருள் செய்ய
ஆண்டி கேணி ஐயனுடன் சிதம்பரத்தில் உறைகின்றான்

மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன்

# தம்பரஅமிலதேரர் கைது செய்யப்பட்டமை ஓர் கீழ்த்தரமான அரசியல் பழிவாங்கல்

## ஜே.வி.பி. தெரிவிப்பு

தேசப் பற்றுடைய தேசிய அமைப்பின் தலைவர் தம்பரஅமிலதேரர் கைது செய்யப்பட்ட சம்பவம் ஓர் கீழ்த்தரமான அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையாக தாம் நோக்குவதாக ஜே.வி.பி.யின் பிரச்சாரச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாட்டிற்காக அரும்பணி ஆற்றிய தம்பரஅமிலதேரர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள அவர், இவ்வாறான கீழ்த்தரமான செயற்பாடுகளினால் தேசப் பற்றுடைய தேசிய மையத்தின் நடவடிக்கைகளை முடக்கிவிட முடியாது என தெரிவித்துள்ளார்.

இதேவேளை தம்பரஅமில தேரருக்கு எதிராக 15 நிதி மோசடிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஓ-6)

# காத்தான்குடியில் டெங்கு நோய் அபாயம் கல்வி நிலையங்களை மூடத் தீர்மானம்

(கொழும்பு)

மட்டக்களப்பு காத்தான்குடி பிரதேசத்தில் டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து மறு அறிவித்தல் வரை அரபுக் கலா பீடங்கள், குர் ஆன் மத்ரசாக்கள், பாலர் பாடசாலைகள் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள் என்பனவற்றை மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவித்தலைப் பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம் பள்ளிவாசல்களில் விடுத்துள்ளது.

நேற்று முன்தினம் பள்ளிவாசல்கள் சம்மேளன பிரதிநிதிகள், நகர சபை உறுப்பினர்கள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்ட கூட்டமொன்றில் இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக டெங்கு நோய் பரவக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது.

காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக தகவல்களின் படி இதுவரை 107 பேர் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளார்கள்.

இதற்கிடையில் காத்தான்குடி பிரதேசத்திலுள்ள வீதிகளிலும், காணிகளிலும் மழை வெள்ளம் தற்போது தேங்கி நிற்பதால் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

வெள்ள நீர் வடிந்தோடுவதற்கு உரிய வடிகாலமைப்பு வசதிகள் இல்லாமையே இதற்குக் காரணம் எனப் பலரும் தெரிவிக்கின்றனர். (ஓ-6)

# அறிவுறுத்தல் வகுப்பு

ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூல வாக்களிப்பின் போது கடமையில் ஈடுபடவுள்ள அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் வகுப்பு எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் உதவித் தேர்தல் ஆணையாளரினால் நடத்தப்படவுள்ளது.

இவ்வகுப்பில் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் செயல்முறை பற்றி விரிவாக விளக்கமளிக்கப்படுவதுடன் அன்றைய தினம் கடமைகளுக்கான ஆவணங்களும் கையளிக்கப்படவுள்ளதால் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் ச. குகதாஸ் அறிவித்துள்ளார். (ஓ-4-19)

# பயங்கரவாதம் காரணமாக இடம்பெயர்ந்த வடக்கு முஸ்லிம்கள் மே மாதத்திற்கு முன் மீள்குடியேற்றப்படுவர்

## பசில் ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதம் காரணமாக இடம்பெயர்ந்த வடக்கு முஸ்லிம்கள் எதிர்வரும் மே மாதத்திற்கு முன்னதாக மீள்குடியேற்றப்படுவார்கள் என ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

புத்தளம், கல்பிட்டி, ஆலங்குடா மைதானத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சொந்த இடங்களுக்குச் செல்லும் மக்களுக்குத் தேவையான சகல வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை எதிர்வரும் வருட ஆரம்பத்தில் புத்தளம் - மன்னார் வீதி மீளவும் மக்கள் போக்குவரத்திற்காக திறக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

## அரசியல் தொடர்புள்ள அரச ஊழியர் தேர்தல் கடமையில் இல்லை

(கொழும்பு)

அரசியல் தொடர்புகளைப் பேணுகின்ற அரச உத்தியோகத்தர்களைத் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தாமல் இருப்பதற்கு தேர்தல்கள் ஆணையாளர் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அனைத்து மாவட்டச் செயலாளர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் செயலகம் குறிப்பிடுகின்றது.

இதற்கமைய சமுர்த்தி, விவசாய உற்பத்தி மற்றும் கமநல சேவை உதவியாளர்கள் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படமாட்டார்களெனவும் எவரேனும் உத்தியோகத்தர் ஒருவர் அரசியல் கட்சியொன்றின் கிளை அலுவலகத்திலோ அல்லது ஏதேனும் செயற்பாட்டு ரீதியான பதவியோ வகிப்பாராயின் அத் தகையவர்களைத் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தாமல் இருப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை நியாயமானதும் பக்கச் சார்பற்றதாகவும் நடத்துவதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதன் நோக்கமாக அமைந்துள்ளது என தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது. (2-6)

## பொன்சேகா தேர்தலில் வென்றால் நாட்டு மக்களின் நிலை கவலைக்கிடம்

### சுகாதார அமைச்சர்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜெனரல் சரத்பொன்சேகா வெற் றியீட்டினால் நாட்டு மக்களையும் விலைக்கு விற்று விடுவார் என சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஜே.வி.பி. கட்சி சுவரொட்டிகளை ஒட்டுவதற்கு காட்டும் திறமையை மக்களின் நலனில் காட்டுவதில்லை என அவர் குறிப் பிட்டுள்ளார்.



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தேசத்தை நேசிக்கும் ஓர் தலைவர் என தெரிவித்த அவர் ஜெனரல் சரத்பொன்சேகா நாட்டையும் படைவீரர்களையும் காட்டிக் கொடுத்துள்ளார் என குற்றம் சுமத்தியுள்ளார்.

சுய இலாப நோக்கத்திற்காக படை வீரர்களை காட்டிக்கொடுக்கும் ஓர் இராணுவ உயரதிகாரி ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் நாட்டு மக்களின் நிலைமை கவலைக்கிடமாக அமைந்து விடும் என அவர் தெரிவித்துள்ளார். (2-6)

## அரசியல் அனுபவம் உள்ள நாம் அறியாக் குழந்தையுடன் மோதவேண்டியுள்ளது

### மஹிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

பயங்கரவாதம் ஒழிக்கப்பட்ட இலங்கையை உலகின் அதிசிறந்த நாடாக்குவதே தமது ஒரே நோக்கம் என்று ஜனாதிபதி



மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் மினுவாங்கொடை நகர சபைக் கூட்டத்தில் கூடியிருந்த ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் கூட்டத்தினரிடையே உரையாற்றிய போது கூறினார். தொடர்ந்தும் பேசிய அவர் மேலும் கூறியதாவது,

தெளிவான மற்றும் உறுதியான நோக்கத்தை கொண்டுள்ள தம்மீது சேறுபூசும் பிரசாரங்களை செய்ய எந்த நியாயமும் இல்லை.

ஜனாதிபதி தேர்தலை அரசியல் சேறு பூசும் நடவடிக்கையாகவே எதிர்க்கட்சியினர் மாற்றியுள்ளனர். அவர்கள் அரசியல் தரிசனம், கொள்கை, பொருளாதார அல்லது அபிவிருத்தி நோக்கு ஆகியவற்றைப் பற்றி ஒரு வார்த்தையேனும் பேசுவதில்லை. மறாக மஹிந்த சிந்தனையில் 95 சத வீதத்தை நிறைவேற்றியுள்ள நான் நிறை வேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்கவில்லை என்பதைப் பற்றி மட்டுமே பேசுகின்றனர்.

ஆனால் மஹிந்த சிந்தனையை நிறைவேற்ற மக்கள் ஆணை வழங்கிய ஆறு வருடங்கபளில் இன்னும் இரண்டு வருடங்கள் மிகுதியாக உள்ளதை அவர்கள் மறந்து விடக் கூடாது.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் இல்லை . அதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுக் கொள்ள மக்கள் முன் செல்ல வேண்டும்.

இதனை செய்வதற்கு எதிர்க்கட்சியினர் தனக்கு எந்த ஒத்துழைப்பும் வழங்கவில்லை. எனினும் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் மட்டுமன்றி பாராளுமன்றத்திலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை மக்கள் எமக்கு பெற்றுத்தருவார்கள் என்று நம்புகிறேன்.

நாற்பது வருட கால அரசியல் அனுபவம் உள்ள நாம் நாற்பது நாட்கள் அனுபவத்தை மட்டுமே பெற்றுள்ள அறியாக் குழந்தையுடன் போட்டியிடவேண்டியுள்ளது.




எனினும் அரசியல் அனுபவத்தின் இடைவெளிக்கு சமமான அதிகப்படி வாக்குகளால் தான் வெற்றி பெறப்போவதாகவும் கூறினார்.

மேலும் எதிர்க்கட்சியினரின் அரசியல் நோக்கம் ராஜபக்ஷ குடும்பத்தினர் மீதான பழி வாங்கும் நோக்கமேயாகும்.

ஆனால் பொய்க்கு ஆயுள் குறைவு. இன்று இங்கு கூடியிருக்கும் இலட்சக் கணக்கான மக்கள் பொய்க்கும், சேறு பூசுவதற்கும் குறைந்த ஆயுளே உள்ளது என்பதை நிரூபித்துக்காட்டப்போகிறார்கள் என்று ஜனாதிபதி கூறினார். (2-6)

## கிழக்கு தமிழர்களின் வாக்குகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கே கிடைக்கும்

### விநாயகமூர்த்தி முரளிதரன்

நாட்டுக்கு பெரும் சேவை செய்துள்ள ஆளுமை மிக்க தலைவர் ஒருவர் இருக்கும் போது வேறு ஒரு தலைவர் நாட்டுக்குத் தேவையில்லை என தேசிய நல்லிணக்க மற்றும் மறுசீரமைப்பு அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு கூறினார். இங்கு அமைச்சர் மேலும் கூறியதாவது,

கடந்த நான்கு வருட காலத்தில் கிழக்கில் பாரிய அபிவிருத்தி நடவடிக்கைகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தரவின் பேரில் மேற்கொள்ளப்பட்டன.

இதன் காரணமாக கிழக்கில் வாழும் தமிழ், சிங்கள, முஸ்லிம் ஆகிய மூவினத்தவர்களும் பெரும் நன்மையடைந்துள்ளனர். எனவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் கிழக்கு



மக்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் வுக்கே வாக்களிக்கத் தீர்மானித்துள்ளனர்.

ஆனால் எதிர்க்கட்சியினர் போலியான ஒரு அரசியலையே முன்வைக்கின்றனர். அவர்களிடம் மக்களுக்கு நன்மை தரக் கூடிய திட்டங்கள் இல்லை. இதனை நாட்டு மக்கள் நன்கறிவர் என்றார். (2-6)

## இம்முறை தேர்தலில் முன்னெப்போதும் இல்லாத வகையில் அதிகளவு தபால் மூல வாக்காளர் விண்ணப்பம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்காக 4 இலட்சத்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் விண்ணப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னொரு போதும் இல்லாத வகையில் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் அதிகளவான தபால் மூல வாக்காளர்கள் விண்ணப்பித்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

விண்ணப்பித்தவர்களில் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படவுள்ளதாகவும், ஏனையவர் களது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என வும் தெரிவிக்கப்படுகிறது.


அத்தியாவசிய சேவைகளையாற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் மட்டுமே தபால் மூல வாக்களிப்புக்கு தகுதி பெறுவார்கள் எனக்குறிப்பிடப்படுகிறது.

தற்போது குருணாகல் மாவட்டத்திலேயே அதிகளவானோர் விண்ணப்பித்துள்ளதாக தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது. (2-6)

## சிறுபான்மை கட்சிகளின் அரசியல் பலத்தை வலுவிழக்கச் செய்ய அரசாங்கம் முயற்சி

### ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)



சிறுபான்மை கட்சிகளின் அரசியல் பலத்தை வலுவிழக்கச் செய்யும் முயற்சிகளை அரசாங்கம் முன்னெடுத்து வருவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கல்முனையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி தேர்தல் திருத்தச் சட்டம் இன ரீதியான கட்சிகளின் பதிவை இரத்து செய்தல் போன்ற நடவடிக்கைகளின் இந்தத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டே முன்னெடுக் கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அண்டை நாடுகளின் அரசியல் நிலைமை மற் றும் யுத்தத்தின் பின்னர் சிறுபான்மை மக்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டே ஜெனரல் சரத்பொன்சேகாவிற்கு ஆதரவளிக்க வேண்டு மென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்தாகவும் அம் பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை போன்ற பிரதேசங் களில் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு அதிகவாக்குகள் கிடைக் கப்பெறும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை முஸ்லிம் காங்கிரஸின் அதிகார மையங் களில் ஐக்கிய தேசிய முன்னணி வெற்றியீட்டும் என்ற விடயத்தை ஜனாதிபதி புலனாய்வுத் தகவல்களின் ஊடாகப் பெற்றுக்கொண்டுள்ளார் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-6)

# கிராமப் புறங்களில் போலி வைத்தியர்கள் !

(கொழும்பு)

நாட்டின் கிராமப்புறங்களில் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போலி வைத்தியர்கள் சேவையாற்றுவதாக தகவல்கள் கிடைத்துள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வைத்தியர்களுக்கான தரச் சான்றிதழ்கள் இன்றி நோயாளர்களுக்கு இவர்கள் சிகிச்சையளிப்பதன் காரணமாக கிராமிய மக்களின் சுகாதார நலனுக்கு பாரிய அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

இதற்கமைய இவ்வாறான வைத்தியர்களை கைது செய்வதற்காக நாடளாவிய ரீதியில் தேடுதல்களை மேற்கொண்டுள்ளதாகவும், மாகாண மற்றும் பிரதேச சுகாதார அதிகாரிகளுக்கு இது தொடர்பிலான அறிவுரைகள் உள்ளடக்கப்பட்ட சுற்றறிக்கை ஒன்று விநியோகிக்கப்பட்டுள்ளதாக சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் அஜித் மெண்டிஸ் தெரிவித்தார்.

இத்தகைய போலி வைத்தியர்களை கைது செய்வதற்காக வைத்திய சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (2-4)

## அமெரிக்காவில்

# ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு 70 கோடி ரூபாவில் சொகுசு மாளிகை

(கொழும்பு)

இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய மற்றும் அவரது குடும்பத்தினர் அமெரிக்கா செல்லும் போது தங்குவதற்கென நியூயோர்க் மன்ஹெட்டன் பகுதியில் 70 கோடி ரூபாவுக்கு சொகுசு வீட்டுடன் கூடிய மாளிகை ஒன்று வாங்கப்பட்டுள்ளதாக லங்க இரித்த பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கோத்தபாய மற்றும் பசில் ராஜபக்ஷ ஆகியோருக்கு நெருக்கமான முகவர் ஒருவரின் மூலம் இந்த மாளிகை வாங்கப்பட்டுள்ளதாகவும் இந்த மாளிகை ராஜபக்ஷ குடும்பத்தினர் அனைவரினதும் பாவனைக்காகவே கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிப்பதாகவும் அந்த செய்தி மேலும் தெரிவித்துள்ளது.

ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு நெருக்கமான முகவர் மூலம் அமெரிக்காவில் நியூ ஜேர்ஸி பகுதியில் பல வீடுகள் இலட்சக்கணக்கான டொலர்களுக்கு வாங்கப்பட்டுள்ளன என்றும் அந்த செய்தி தெரிவித்திருக்கிறது. (ஓ-6)

# யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்தியா செயற்கை கால்களை வழங்கவுள்ளது

(கொழும்பு)

யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு, இந்தியா செயற்கைக் கால்களை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது.

இந்தியத் தன்னார்வத் தொண்டு நிறுவனமான பகவான் மாவீர் விக்லாங் சஹாயட சமித்தி என்ற அமைப்பின் ஊடாக இந்த செயற்கைக் கால்கள் வழங்கப்பட்டுள்ளன.

வடக்கில் யுத்தம் காரணமாக கால் இழந்த பொதுமக்களுக்கு அடுத்த மாதம் இந்தக் கால்கள் வழங்கப்படவுள்ளன.

யுத்தம் காரணமாக சுமார் 2000 பேர் கால்களை இழந்துள்ளதாக தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன. ஜெய்ப்பூர் செயற்கைக் கால் உற்பத்தி தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த செயற்கைக் கால்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கால்களின் உதவியுடன் வழமையான சகல செயற்பாடுகளையும் மேற்கொள்ள முடியும் என சுட்டிக்காட்டப்படுகிறது. (ஓ-6)

# பன்றிக் காய்ச்சலில் இருந்து பாதுகாக்க 20 இலட்சம் ஊசிமருந்து

(கொழும்பு)

இன்ஃப்ளுவன்சா ஏஎச்1என்1 வைரசிலிருந்து இலங்கையர்களை பாதுகாத்துக் கொள்வதற்கான நடவடிக்கையாக 20 இலட்சம் ஊசிமருந்துகளை வழங்கவுள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இதன்போது முதற்கட்ட ஊசிமருந்து தொகைகள் அடுத்தமாதம் வழங்கப்படும் என உலக சுகாதார அமைப்பின் இலங்கை பிரதிநிதி கூறியுள்ளார்.

இதேவேளை இன்ஃப்ளுவன்சா ஏஎச்1 என்1 தடுப்பூசி மருந்துகளை வழங்குவதற்கான திட்டவரைபொன்றை அந்த அமைப்பு சுகாதார அமைச்சிடம் கோரியிருந்தது.

இதனடிப்படையில் குறித்த திட்ட வரைபொன்றை உரிய காலத்தில் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்புப் பிரிவின் நிபுணர் ரஞ்சன் விஜயசிங்க தெரிவித்தார்.

இன்ஃப்ளுவன்சா எனப்படும் பன்றிக் காய்ச்சல் காரணமாக அண்மைக்காலங்களில் இலங்கையில் 35 பேர் உயிரிழந்துள்ளதுடன் 518 பேர் தொற்றுக்குள்ளாகி இருப்பதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. (ஓ-4)

# சரத்பொன்சேகாவிற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும்

## சரத் கொஹங்காகே

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளின் பொது ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் மாற்றுக்குழு ஜனாதிபதி வேட்பாளர் சரத் கொஹங்காகே தெரிவித்துள்ளார்.

அமெரிக்கக் குடியுரிமைப் பெற்றுக் கொண்டு அந்நாட்டு அரசியல் சாசனத்திற்கு அமைவாக செயற்படுவதாக உறுதியளித்த நபர் எவ்வாறு இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியும் எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

இரட்டை குடியுரிமை கொண்ட ஜெனரல் சரத் பொன்சேகா போன்றவர்கள் இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது சட்ட சிக்கலை ஏற்படுத்தும் என சுட்டிக் காட்டியுள்ளார்.

இவ்வாறு இரட்டை குடியுரிமை கொண்டவர்கள் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளிட்ட முக்கிய பதவிகளை வகிப்பவர்களுக்கும் இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதே தமது விருப்பம் எனவும் இதன் சட்டப் பின்னணி தமக்கு சரியாகத் தெரியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகா ஊடகங்களுக்கு முன்னுக்குப் பின் முரணான தகவல்களை வழங்கி வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (ஓ-6)

# கொழும்பு விடுதியில் தமிழ் குடும்பஸ்தர் கைது

(கொழும்பு)

கொழும்பில் உள்ள விடுதி ஒன்றில் வைத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அன்று சந்தேகத்தின் பேரில் இராணுவப் புலனாய்வு பிரிவினரால் குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மன்னாரை பிறப்பிடமாகக் கொண்டவரும், ஒரு குழந்தையின் தந்தையுமான வசந்தராசா, வசந்தரூபன் என்றழைக்கப்படுபவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

மேலும் வசந்தரூபனை தமது கட்டுப்பாட்டுக்குள் 4ஆம் மாடியில் வைத்து விசாரணை செய்து வருவதாக, புலனாய்வுப் பிரிவினர் கடிதமூலம் வசந்தரூபன் மனைவிக்கு தெரியப்படுத்தியுள்ளதாகவும் இவர் கடந்த 26. ஆம் திகதியன்று விடுதியில் வைத்து இராணுவப் புலனாய்வு பிரிவினரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டும், அச்சுறுத்தப்பட்டு சென்றதாகவும் மறுநாள் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (2-6)

# பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்

## ட்ரான்பெரன்ஸி கோரிக்கை

பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென ட்ரான்பெரன்ஸி இன்டர்நஷனல் அமைப்பு எனப்படும் ஊழல் ஒழிப்பு பிரசார நிறுவனம் தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டுள்ள சுவரொட்டிகள் மற்றும் பதாதைகளை அகற்றுவதற்கு அநேகமான பொலிஸ் நிலையங்கள் நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளதாகவும் இதன்மூலம் தேர்தல் ஆணையாளரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் உதாசீனம் செய்யப்பட்டுள்ளதாக அமைப்பு தெரிவித்துள்ளது.

டிசம்பர் மாதம் 27 ஆம் திகதிக்கு முன்னதாக அனைத்து சட்டவிரோத சுவரொட்டிகளையும் பதாகைகளையும் அகற்றுமாறு தேர்தல் செயலகம் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-2)

# நடமாடும் ஆய்வுகூட வசதிகள் ஏற்படுத்த நடவடிக்கை

(பொன்னாலை)

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்ட பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளுக்கு நடமாடும் ஆய்வுகூட வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு மாகாண கல்வி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் தென்மராட்சிப் பிரதேசத்தில் இரு பாடசாலைகளுக்கு ஆய்வுகூட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மக்கள் மீள்குடியமர்ந்த வன்னிப் பிரதேச பாடசாலைகளுக்கும் இவ்வாறான ஆய்வுகூட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-49)

# பாலங்கள் செப்பனிட்டு பயணிப்பதில் சிரமம்

(பொன்னாலை)

வட்டுக்கோட்டை - மாவடிச் சந்தியிலும் ஆனைக்கோட்டை - மூத்தவிநாயகர் ஆலயத்துக்குச் சமீபமாகவும் நிர்மாணிக்கப்பட்டு வந்த இரு மதகுகளின் புனரமைப்பு வேலைகள் பூர்த்தியடைந்து போக்குவரத்துக்கு திறந்துவிடப்பட்டுள்ளன.

இம் மதகுகளின் திருத்த வேலைகள் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக இடம்பெற்று வந்த நிலையில் தற்போது திருத்த வேலைகள் முடிவடைந்து மக்கள் போக்குவரத்துக்கு திறந்து விடப்பட்டுள்ளன.

எனினும் இம் மதகின் இரு மருங்கிலும் காணப்படும் பள்ளம் தாரிட்டு நிரப்பப்படாததால் வீதியால் செல்லும் வாகனங்கள் பலத்த சிரமத்தின் மத்தியிலேயே பயணிக்க வேண்டியுள்ளது.

பொதுப் போக்குவரத்து நன்மை கருதி குறித்த பள்ளத்தை செப்பனிடுவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரிக்கை விடுக்கப்படுகிறது. (ஓ-49)

# சீனாவின் ஆயுதக்கப்பலை தாமே திருப்பியனுப்பியதாக கோத்தபாய தெரிவிப்பு

(கொழும்பு)

சீன ஆயுதக் கப்பலை திருப்பி அனுப்பியமை தொடர்பான முழுப் பொறுப்பையும் தாம் ஏற்றுக்கொள்வதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

யுத்தம் நிறைவடைந்த நிலையில் சீனாவினால் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஆயுதக் கப்பலைத் தாமே திருப்பி அனுப்பியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் பாரியளவு ஆயுதங்களை தேவையில்லாமல் களஞ்சியப்படுத்துவதில் அர்த்தமில்லை என்ற காரணத்தினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் குறித்த ஆயுதக் கப்பலை ஏற்றுக்கொண்டிருந்தால் சுமார் 32 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலுத்த வேண்டியேற்பட்டிருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்புச் செயலாளரின் பொறுப்பற்ற செயல்களினால் சீனாவுடனான உறவில் முறுகல் ஏற்பட்டதாக எதிர்க்கட்சி பிரதான வேட்பாளர் சரத் பொன்சேகா சுமத்திய குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும் வகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எனினும் ஆயுதங்கள் திருப்பி அனுப்பி வைக்கப்படுவதற்கு முன்னர் சீனாவிற்கான இலங்கைத் தூதுவரிடம் தொலைபேசி மூலம் தாம் நிலைமைகளை விளக்கியதாக பாதுகாப்புச் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார். (6-2)

# அதிபர்களுக்கான கூட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு வலயக் கல்வி அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சகல அதிபர்களையும் தர உள்ளீட்டுக் கணக்கு இறுதி அறிக்கையுடன் சமூகமளிக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஓ-29)

# ஈழத்துச் சைவசித்தாந்த அபிவிருத்திப் பணியில் சேர்.பொன்.இராமநாதன் (1851-1930)

09



பேராசிரியர்
கலைவாணி இராமநாதன்

சென்ற் மத்தேயு, ஜோன் ஆகியோர்களது சுவிஷேசத்தில் எழுதிய நற்செய்திகளுக்கு இராமநாதன் அவர்கள் அளித்த விளக்கவுரைகள், சைவசித்தாந்த ஞான் விளக்கங்கள் அனைத்தும் சமயங்களின் அடிப்படைத் தத்துவ ஒருமைப்பாட்டை விளக்குவதாகவும் அமைந்தது. இந்நூல்கள் அன்னாரை ஒரு முற்றுமுணர்ந்த தத்துவ ஞானியாகவே காட்டுகின்றன. இராமநாதனது ஏழு பிரசங்கங்களின் விடயங்களின் சாரமானது " ஆன்ம கலாசாரம்" என்ற நூலில் திரட்டப்பட்டுள்ளது. (Soul Culture) குறித்த பிரசங்கங்களின் நடுநாயகமாகத் திகழும் "ஞானத் திறவு" (கோல்) key of knowledge ) என்ற பகுதி "எல்லாச் சமயங்களுக்கும் இன்றியமையாத ஒன்றாய் அமைந்து சைவசித்தாந்த ஞானத்தின் அகண்ட வியாபகப்பண்புக்கு அத்தாட்சியாய் இருப்பது குறிப்பிடத்தக்கது" என மு.ஞானப்பிரகாசம் அவர்களும் தமது கட்டுரையில் கூறியிருப்பது இங்கு மனம் கொள்ளத்தக்கது. ஆன்ம கலாசாரம் என Myron phoelp குறிப்பிடப்பட்டிருப்பது "சைவ சித்தாந்த கலாசாரம்" என்பது புலனாகும் போது " சைவமெய்யியலானது ஒரே காலத்தில் சமய நெறியாகவும் மெய்யியல் கலாசராமாகவும் தன்னை வெளிப்படுத்தும் வாய்ப்பினையும் சேர்.பொன். இராமநாதன் அவர்களே தமது பிரசங்கத்தின் மதிநுட்பத்தால் விருத்தியுறச் செய்தமையும் இங்கு பிரதானமாகச் சுட்டிக்காட்ட வேண்டிய சிறப்பம்சமாகும். இவ்வாறாக இராமநாதன் அவர்களால் மேல்நாடுகளில் சைவசித்தாந்த ஞானமானது நன்கு விருத்தி பெற்றதுடன் உன்னதமான மகிமையும் பெற்றது என்பதனை இதுவரை கூறிய விடயங்கள் புலப்படுத்திநிற்கின்றன.

## முடிவுரை

வேதாகமங்கள் என்னும் விருட்சத்தில் வேரோடி முளைவிட்டு காலம் தோறும் நிகழ்ந்த சமுதாய வரலாற்றுப் பரிமாணங்களினூடாக வெளிவந்து, இன்றைய அணுவாயுதத் தகவல் தொழில்நுட்ப யுகத்தின் சவால்களையும் எதிர்கொண்டு, மனித வாழ்வை நெறிப்படுத்துவதில் சைவ சமயநெறிக்கும் முக்கிய பங்குண்டு. இந்துசமயம் இன்று உலகளாவிய நிலையில் போற்றப்பட்டாலும் அங்கு கூறப்படும் உண்மைகள், மெய்யியற் சிந்தனைகள் என்பவற்றின் ஆழமும் நுட்பமும் அறியாது இந்துக்களே அவைகளிற்கெதிராக சில சீர்கேடுகளை விளைவிக்கின்றனர். அன்பு நெறியே இறை உணர்வு, அன்பு உணர்வே சிவம் - அன்பே வடிவானவன் இறைவன் பக்தியுடன் கூடிய ஒழுக்கசீலமான வழிபாட்டையே இறைவன் விரும்புகிறான். இந்துக்கள் , கருணையை உள்ளத்தில் வளர்த்து " அன்பு தான் சிவம்" என்பதனை நடத்தையில் வெளிப்படுத்த வேண்டும். ஆண்டவன் வாழும் கோயில் அடியவர்களது உள்ளக் கமலமாகும். அதனாலே " உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது" என்றார் விபுலானந்தர். "பல நூல் படித்து நீ அறியும் கல்வி - பொது நலம் நினைத்து நீ வழங்கும் செல்வம் - பிறர் உயர்வினிலே உனக்கிருக்கும் இன்பம் -இவை அனைத்திலுமே இருப்பதுதான் தெய்வம்" என்னும் கவிஞர் ஒருவரின் கூற்றிலே இறைவன் இருப்பிடம் எது என்பது தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. சேர்.பொன். இராமநாதனது சேவைநல மேம்பாட்டினை இவ்வரிகள் ஆழமாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளன. இவை அனைத்தையும் உள்வாங்கியே சைவசித்தாந்த வாழ்வியலை தமது சொந்த வாழ்வில் கடைப்பிடித்து பிற்கால மனித சமுதாயத்திற்கு ஓர் உதாரண புருசராக வாழ்ந்த சேர்.பொன். இராமநாதனது சைவ சித்தாந்த பணிகள் ஈழத்து சைவசித்தாந்த வளர்ச்சியில் அழியாத ஓர் முத்திரையைப் பதித்துள்ளன என்பது இக்கட்டுரையால் பெறப்படும் உண்மையாகும்.

இன்றைய வாழ்விலே அமைதி - சமாதானம் ஊசலாடிக் கொண்டிருக்கிறது எனில் அதற்கு அறிவியலை வளர்த்த மனிதன் ஆன்மவியலை வளர்க்காமல் போனதே காரணமாகும். விஞ்ஞான வசதிகளை தனது வாழ்வுடன் இணைத்த மக்கள் மெய்ஞ்ஞான வாழ்வியலை தம்முடன் இணைக்க மறந்து விட்டனர். அதனால் இளம் தலைமுறையினரிடம் அறிவுத்திறன், உழைப்புத்திறன் ஆக்கத்திறன், ஆளுமை, செல்வவளம், அனைத்தும் இருந்தாலும் சாந்தி, சமாதானம், அமைதி என்பன கேள்விக் குறியாயுள்ளது. மத நல்லிணக்கத்திற்கும் சமுதாயப் புரிந்துணர்விற்கும் சைவ சித்தாந்த ஞானமே சிறந்த சாதனம் என்பதை இராமநாதன் போன்ற பலரும் மேல்நாட்டினருக்கும் உணர்த்திச் சென்றனர். இத்தகைய அற உணர்வு மேலோங்க வேண்டுமென்றே தன்னலமற்ற சேவை மார்க்கத்தில் நின்ற இளம் சந்ததியினரை நெறிப்படுத்தும் கல்வி, சமயப் பண்பாட்டுணர்வுடன் கூடிய கல்லூரிகளையும், கோயில்களையும் அமைத்துப் பணிசெய்தார். சைவத்தமிழ் பண்பாட்டில் வளரும் மாணவ சமூகம் ஒழுக்க விழுமியமுள்ள நாளைய தலைமுறைகளாக வளரவேண்டுமென்ற வேணவாவினால் தான் ஔவையார் கூறிய ஆத்திசூடி, கொன்றைவேந்தன், ஸ்ரீ இராமதேயம் என்னும் தர்மசாத்திர பாடநூல்களையும் தாமே உருவாக்கினார் பகவத் கீதைக்கு சைவசித்தாந்த மரபாக விளக்கவுரை எழுதி எல்லோரும் சுயநலமற்ற கர்மயோகியாகத் தொண்டு பணி செய்ய வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.



சேர்.பொன்.இராமநாதன்

சைவசித்தாந்த ஞானத்தின் ஒழுக்கவியல் பகுதியே சிவஞானபோதம் முதலிய சாஸ்திரங்கள் கூறும் 'சாதனை இயல்' என்னும் பகுதியாகும். அந்நெறியில் நான்கு வகை படிநிலைகளிலும் நின்று சேவையாற்றிய திறமையினை இராமநாதன் அவர்களது வாழ்க்கை மதிப்பீடுகள் உணர்த்தியுள்ளன என்பதும் இக் கட்டுரையாற் பெறப்படும். சரியை என்பது சரியான பாதையைத் தெரிந்து திருவருட் துணையுடன் கூடிச் செல்லுதல் என பண்டிதர் கந்தையர் அவர்கள் விளக்கியுள்ளார். உண்மைச் சரியை என்பது பற்றற்ற பண்புடன் பணிசெய்தலாகும். இது நிஷ்காமிய கர்மா எனப்படும். இந்நிலையில் பலன் கருதாது பணியாற்றுவதனால் இருவினை ஒப்பும் மலபரிபாகம் ஏற்பட்டு சத்தினிபாதம் என்னும் திருவருட்பேறு கைகூடும். சரியை, கிரியை தொண்டினால் பணிவிடை செய்யும் போது மூலமாகிய ஆணவம், வலிகுன்றி விடும் ஆணவ மலத்தை வலிகெடச் செய்வதே தொண்டு நெறியாகும். (தொடரும்)

## இடம்பெயர் மக்களின் வாக்குகளை பெற அரசின் முனைப்பு தீவிரம்

யாழ்ப்பாணம் மற்றும் வன்னி மாவட்டங்களில் உள்ள இடம்பெயர் மக்களது வாக்குகளைப் பயன்படுத்திக்கொள்வதற்கு அரசு பெரும் முனைப்புக் காட்டுகின்றது. இதன் பிரகாரம் அவர்களை வாக்களிக்கச் செய்யும் நடவடிக்கையை முழுமூச்சாக அரசு முடுக்கி விட்டுள்ளது.

தற்போது இடம்பெயர்ந்துள்ள நிலையில் யாழ்ப்பாணத்தில் 2 ஆயிரத்திற்கும் குறைவான நிலையிலும் வவுனியா முகாம்களில் உள்ளவர்களில் 2 ஆயிரத்திற்கும் குறைவானவர்களுமாக மொத்தமாக 4 ஆயிரத்திற்கும் குறைவானவர்களே வாக்களிக்க தமது படிவங்களை சமர்ப்பித்துள்ளார்கள்.

அத்தோடு கடந்த 24ஆம் திகதியுடன் படிவங்களை சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் முடிவடைந்துள்ளமையினால் இலட்சக்கணக்கானவர்கள் வாக்களிப்பதற்கான சாத்தியம் இல்லாமல் போயுள்ளது. இந்த நிலையில் இம் மக்களை உடனடியாக வாக்களிக்கச் செய்வதற்கு ஏதுவாக அவர்களை மீளக் குடியமர்த்த அல்லது பொருத்தமான வகையில் மீளக் குடியரும் கிராமங்களில் முகாம்களை அமைத்து அவர்களை மீளக் குடியேற்ற தற்போது அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றது.

இதன் பிரகாரம் வவுனியா முகாம்களில் இருந்து இவர்கள் வன்னிப் பகுதியிலுள்ள வேறு முகாம்களுக்கு மாற்றப்பட்டு அங்கு கொத்தணி வாக்களிப்பு மையங்களை அமைக்க முயற்சிகளை மேற்கொள்வதாகவும் தெரிய வருகின்றது.

அத்தோடு யாழ் .தேர்தல் மாவட்டத்தின் கீழ் கிளிநொச்சியும் உள்ளடங்கியிருப்பதால் கிளிநொச்சியில் மக்கள் மீளக்குடியமரும் இடங்களில் பொருத்தமான வாக்களிப்பு நிலையங்களை அமைக்க தாங்கள் தீர்மானித்திருப்பதாக யாழ். செயலகத்திலுள்ள தேர்தல் திணைக்கள அதிகாரிகள் கூறுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்பிரகாரம் வன்னி மாவட்டத்தின் ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களையும் இதேபோன்று முகாம்களை அமைத்து கொத்தணி வாக்களிப்பு நிலையங்களை அமைக்க அரசு தற்போது திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கின்றது. இவைதொடர்பாக ஆராய்வதற்காக மேலதிக தேர்தல் ஆணையாளர் எஸ்.சிறிவர்த்தன யாழ்ப்பாணத்திற்கும் வவுனியாவிற்கும் விஜயம் செய்யவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அதிகாரிகளை சந்திக்கவுள்ள இவர் வவுனியாவிலும் சந்திப்புக்களை நடத்தி இந்த மக்கள் தேர்தலில் வாக்களிப்பது தொடர்பாக ஆராயவுள்ளதாகவும் இதற்கேதுவாக வன்னி முகாம்களில் இருந்து அடுத்துவரும் வாரங்களில் மக்களை கிளிநொச்சி மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பாரிய முகாம்கள் அமைக்கப்பட்டு இடம்பெயரச் செய்யலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (2-6)

## தேர்தல் வேலைத்திட்டங்களுக்கு 18 கோடி ரூபாய் தேவை

### அஞ்சல் திணைக்களம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலின் போது தேர்தல் வேலைத்திட்டங்களுக்கு 18 கோடி ரூபா நிதி தேவைப்படுகின்றதாக அஞ்சல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆரம்பகட்ட நடவடிக்கைகளுக்காக 9 கோடி ரூபா நிதியை வழங்கும்படி அஞ்சல் திணைக்களம் தேர்தல் ஆணையாளரை கோரியுள்ளது.

இதேவேளை தேர்தல் சட்டங்களுக்கமைய பிரசாரப் பதாகைகள், சுவரொட்டிகள் போன்றவற்றை அகற்றுவதற்கும் பெருமளவான நிதியுதவி தேவைப்படுவதாக பொலிஸ் திணைக்களம் தேர்தல் ஆணையாளரிடம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான பதாகைகள், சுவரொட்டிகளை அகற்றுவதற்கு தனியார் ஊழியர் களை நியமிக்க வேண்டியுள்ளதால் ஒரு கோடியே 20 இலட்சம் ரூபா நிதி தேவைப்படுவதாக பொலிஸ்திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தினால் கோரப்பட்ட 30 கோடி ரூபா பொலிஸாரின் வழமையான அனைத்துச் செயற்பாடுகளுக்கும் கோரப்பட்டிருந்ததாகவும் பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-4)

## தமிழகத்தில் கடலட்டை மோசடியில் மேலும் ஒரு இலங்கையர் கைது

(கொழும்பு)


தமிழகத்தில் கடலட்டை மோசடியில் ஈடுபட்ட இலங்கையைச் சேர்ந்த மேலும் ஒரு நபர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தமிழகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்ட இலங்கையைச் சேர்ந்த நபர் ஒருவரிடம் மேற்கொண்ட விசாரணையில் பெறப்பட்ட தகவலையடுத்தே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட நபரிடமிருந்து தொடர்ந்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் இவர் தொடர்பில் வழக்குகள் எதுவும் இல்லை எனவும் கூறப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவரின் தலைமை யில் மேலும் பல கடலட்டை மோசடிக்காரர்கள் தொழிற்பட்டு வருவதாக குறித்த நபரிடம் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. (2-4)

# மூளையின் சீரான இயக்கத்திற்கு




நாம் உறங்கும் போதும் கூட விழித்துக் கொண்டு 24 மணி நேரமும் தனது பணியை மூளை மேற்கொண்டு வருகிறது. இத்தகைய மூளையின் செயல்பாடு சீராக இருப்பது தான் நமது உடலுக்கு நல்லது.

மனித மூளை 1.5 கிலோ எடை கொண்டது. உடலின் அனைத்து இயக்கங்களும் மூளையின் உத்தரவுப்படியே நடக்கின்றன. நாம் சிந்திப்பது, பேசுவது, ஓடுவது, உண்பது, மகிழ்ச்சி, வருத்தம் என அனைத்தும் மூளையின் உத்தரவுப்படி தான் நடக்கிறது.


கரு உற்பத்தியான 2 ஆவது வாரத்தில் மூளை தோன்றி விடுகிறது. 3 மாத கருவின் மொத்த எடையில் பாதி, மூளையின் எடையாக இருக்கும்.

உடலின் எந்தவொரு உறுப்பும் பாதிக்கப்பட்டால், மருத்துவம் மூலம் அதை குணப்படுத்துகிறோம். மூளையின் திறன் பாதிக்கப்பட்டால் உடல் உறுப்புகளின் செயற்பாடுகள் அனைத்தும் பாதிக்கப்படும். மூளை செயலிழந்துவிட்டால் இறப்பைத் தான் சந்திக்க வேண்டும்.

உடலின் மொத்த எடையில் 40 இல் ஒரு பங்குள்ள மூளைக்கு உடலில் ஓடும் இரத்தத்தில் 5 இல் ஒரு பங்கு தேவைப்படுகிறது.




# கண்களில் இருக்கும் செல்களின் இயக்கம்



ஏதேனும் தூசு பறந்து வந்தால் உடனடியாக நமது கண்கள் மூடிக் கொள்ளும். காற்றடித்தாலும், முகத்தில் முடி விழுந்தாலும் கண்கள் மூடிக் கொள்கின்றன.

இதற்குக் காரணம் கண்களில் இருக்கும் செல்களின் துரித செயல்பாடு தான்.

இவைகள் மூளையின் கட்டளை இன்றி தாங்களாகவே செயல்படுகின்றன.

விழித்திரையில் உள்ள ஒருவகை செல்கள் தனக்கு அருகில் வரும் பொருட்களை எளிதில் உணர்ந்து ஆபத்து என்றால் விரைந்து செயல்படக் காரணமாக இருக்கின்றன.

இந்தச் செயல் மூளையின் உதவி இல்லாமலேயே நடைபெறுகிறது. இதனால் ஆபத்திலிருந்து விரைவில் தப்பிக்க முடிகிறது.

இந்த எச்சரிக்கை அமைப்பு எல்லா உயிரினங்களுக்கும் இயற்கையாகவே அமைந்துள்ளது என்பதை மருத்துவ ஆய்வு கண்டுபிடித்துள்ளது.

# மிகுந்த பயன் தரும் எலுமிச்சைசாறு

சொல்லப் போனால் எலுமிச்சை சாறு ஒரு அருமருந்து என்றே கூற வேண்டும்.



இரத்த அழுத்தம் குறைவாக இருப்பவர்கள் எலுமிச்சை சாறை அவ்வப்போது குடித்து வரலாம்.

இரத்தஅழுத்தம் குறைந்த தலைச்சுற்றல் இருக்கும் போது எலுமிச்சை சாறைக் குடித்தால் உடனடியாக உங்களது இரத்தஅழுத்தம் சமநிலையை அடையும்.

எலுமிச்சை சாறு குடித்தவுடன் சிறிது வியர்வை வெளியேறும். இதனால் இரத்தஅழுத்தம் சமநிலைக்கு வந்து உங்கள் தலைச்சுற்றல் நிற்கும்.

மேலும், எலுமிச்சை சாறு உடல் நோய் எதிர்ப்புச் சக்திக்கும் மிகுந்த பயன்தரும் ஒரு பானமாகும். வயிற்றில் புண் இருப்பவர்கள் எலுமிச்சை சாறை அதிகம் சேர்த்துக் கொள்ளவேண்டாம்.

# முடி கொட்டுதலும் ஆரோக்கியமும்



முடிகொட்டுவது தொடர்பான அனைத்துப் பிரச்சினைகளுக்கும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ உடல் ஆரோக்கியமின்மையே காரணம்.

உடல் ஆரோக்கியத்திற்கு காரணமாக இருப்பது சத்துக்குறைவுதான்.

சுவையானது என்று நாம் தேர்ந்தெடுத்து சாப்பிடும் உணவுகளில் போதிய ஊட்டச்சத்துகள் இல்லாதிருந்தால் ஆரோக்கியம் குறைந்து முடி தொடர்பான பிரச்சினைகள் தலைதூக்குகின்றன.

குறிப்பிட்ட கல்சியம், விற்றமின், தாதுஉப்புகள் மட்டும் எடுத்துக் கொண்டாலும் கேசம் உலர்ந்த தன்மையை அடையலாம். மற்ற நோய்த் தொற்றுகளாலும் கேசம் உலர்ந்திருக்கவும், உதிரவும் செய்யும்.

எனவே தலைமுடி கொட்டுவதற்கு அடிப்படைப் பிரச்சினை என்ன என்பதை கண்டறிந்து அதன்படி சிகிச்சை பெற்றால் உடனடியாக நீண்ட கூந்தலைப் பெறலாம்.

# வயிற்றுக்கு வைரமாகும் இஞ்சிச்சாறு



இஞ்சிச் சாற்றுடன் சமளவு எலுமிச்சை சாறு, புதினாச்சாறு, தேன் சேர்த்து தினமும் 2 அல்லது 3 வேளை சாப்பிட்டு வர செரியாமை, வாந்தி, வயிற்று உப்புசம், மஞ்சள் காமாலை, வயிற்றுக் கோளாறுகள் குணமாகும்.

இஞ்சியை இடித்து சாறெடுத்து சற்றுச் சூடாக்கி, தலையில் பற்றுப் போட தலை வலி, நீரேற்றம் குணமாகும்.

வெற்றிலைச் சாற்றுடன் இஞ்சிச் சாறும், தேனும் கலந்து குடித்துவர இருமல், சளி குணமாகும்.

இஞ்சிச் சாற்றுடன், மாதுளம் பழச்சாறு சமஅளவு கூட்டி, பாதியளவு தேனும் கலந்து சாப்பிட்டு வர ஆஸ்துமா குணமாகும்.

தண்ணீரில் இஞ்சி, சீரகம், கருவேப்பிலை மூன்றையும் போட்டு கொதிக்க வைத்து வடிகட்டி குடித்துவர செரியாமை, வயிற்றுக் கோளாறுகள் குணமாகும்.

# தொடர்ந்து மவுத்வோஷ் பாவிப்போருக்கு வாய்ப் புற்றுநோய் ஏற்பட வாய்ப்பு

வாய் கொப்பளிக்கும் மவுத்வோஷ்களை நீண்ட காலமாக பயன்படுத்துவோருக்கு புற்றுநோய் ஏற்படும் அபாயம் உள்ளதாக ஆராய்ச்சி நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.



இது தொடர்பாக அவுஸ்திரேலியாவின்குயின்ஸ்லாந்து பல்கலை, மெல்போர்ன் பல்கலைக்கழகம் என்பன மேற்கொண்ட ஆய்வுகளில், பற்சிதைவு, வாய் துர்நாற்றத்தைக் கட்டுப்படுத்த பிரபலமான பல மவுத்வோஷ்கள் உள்ளன. அவை பயன் அளித்தாலும் குறுகிய காலத்துக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

தொடர்ந்து மவுத்வோஷ் பயன்படுத்துவோருக்கு வாய் புற்றுநோய் ஏற்பட 9 மடங்கு வாய்ப்புள்ளது. புகைபிடிப்பவர்களுக்கு இது பல மடங்கு புற்றுநோய் வாய்ப்பை ஏற்படுத்துகிறது. மது அருந்துவோருக்கு 5 மடங்கு அபாயம் உள்ளது.

எனவே, மவுத்வோஷ்களை குறுகிய காலத்துக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று ஆய்வில் கூறப்பட்டது.

இங்கிலாந்தின் நியூகேசில் பல்கலைக்கழக ஆய்வில் அற்கஹோல் உள்ள மவுத்வோஷ்களைப் பயன்படுத்தினால் வாய்ப்புற்றுநோய் ஏற்படலாம்.

எனவே அவற்றைப் பயன்படுத்தாமல் இருக்க நோயாளிகளுக்கு பல் டாக்டர்கள் அறிவுறுத்த வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

அற்கஹோல் கொண்ட மவுத்வாஷ்களைப் பயன்படுத்துவதால் புற்றுநோய் அபாயம் மட்டுமின்றி வாயில் எரிச்சல் உணர்வு, வறட்டுத்தன்மை, வலி ஆகியவையும் ஏற்படலாம்.

மவுத்வோஷில் அற்கஹோல் சேர்ப்பதால் எந்தப் பயனுமில்லை என்பதை அவற்றைத் தயாரிக்கும் நிறுவனங்கள் உணர வேண்டும் என்றும் ஆய்வில் கூறப்பட்டது.

# உயர் இரத்த அழுத்தத்திற்கு

இரத்த அழுத்த அளவுகள் அதிகமாகும் போது உயர் இரத்த அழுத்த நோய் ஆரம்பிக்கிறது.



அதாவது உயர் நிலை இரத்த அழுத்தம் 130 எம்எம்எச்ஜிம், கீழ்நிலை இரத்த அழுத்தம் 85 எம்எம்எச்ஜிம் இருந்தால் உயர் இரத்த அழுத்த நோயின் ஆரம்பக் கட்டம் என்கிறார்கள். இதனை 'ப்ரீ ஹைபர்டென்ஷன்' என்று கூறுகிறோம்.

இந்த நிலையில் உடற்பயிற்சி செய்தல் உள்ளிட்ட வாழ்க்கை முறை மாற்றம், உப்பின் அளவைக் குறைத்துச் சாப்பிடுதல் போன்றவை இரத்த அழுத்தத்தை மேலும் அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ளலாம்.

உணவில் உப்பை சேர்ப்பதைக் குறைத்தால் மட்டும் போதாது, உப்பு அதிகமாக சேர்க்கப்படும் சிப்ஸ், ஊறுகாய் போன்றவற்றை முற்றிலுமாக தவிர்த்து விட வேண்டும்.

பலருக்கு உயர் இரத்த அழுத்த நோய் தற்போது பரவலாக காணப்படுகிறது. இதனை கவனிக்காமல் விட்டுவிட்டால் பேராபத்தை ஏற்படுத்திவிடும்.

# புகைத்தால் சுவைக்கும் திறன் போகும்

புகைத்தால் புற்றுநோய் வரும் என்று சொல்லிச்சொல்லி ஓய்ந்து விட்டோம். புதிதாக ஒரு ஆய்வு சொல்வது இன்னும் அதிர்ச்சியை அளிக்கிறது.



அதாவது புகைப்பதால் ஒருவருடைய நாக்கு சுவை அறியும் திறனை இழந்து விடுகிறதாம்.

கிரீஸ் நாட்டில் உள்ள அரிஸ்டோட்டில் பல்கலைக்கழக ஆய்வுக் குழு செய்த ஆய்வின் முடிவில் இந்தத் தகவல் தெரியவந்துள்ளது.

அதாவது, புகைப்பழக்கம் உடையவர்களின் நாக்கில் இரத்த ஓட்டம். குறைந்து சுவை அரும்புகளில் ஒருவித படிவுகள் ஏற்படுகின்றன.


இது நாக்கின் சுவை அறியும் திறனை வெகுவாக பாதித்து விடுகிறது தெரிய வந்துள்ளது.

# விஜயநகர கலைப்பாணி

89

ஆரியன் மண்டபத்து ஆரியன் வாசல் வழியே இரண்டாம் பிரகாரத்தை அடைய முடியும். அதிலே வைரவர் கோயிலும் விநாயகர் கோயிலும் அமைந்திருக்கின்றன. அவற்றிலே அடியார்களுக்கு விபூதிப் பிரசாதம் வழங்கப்படும்.

கள்ளழகர் சந்நிதியின் கர்ப்பக்கிரகம் வட்ட வடிவமானது. அதன்மேல் அமைந்த விமா




திருமோகூர்

னமும் அவ்வண்ணமானது. அதன் பிரதக்ஷிண பாதையும் வட்டமான தோற்றங் கொண்டதாகும். அந்த வட்டமான பிரதக்ஷிண பிரகாரம் நங்கல் குன்றம் பிரகாரம் என்று சொல்லப்படும். அதன் சுவர்களில் துளையிட்டுச் செம்மையாக அமைக்கப்பட்ட பலகணிகள் உள்ளன. வைணவக் கோயில்களிலே சயனக் கோலத்து மூலவரைக் கொண்ட சந்நிதானங்களில் விமானத்தை வட்டமாகவோ வண்டிக்கூடாரம் போலவோ அமைப்பது வழமை.

ஆனால், இங்கு வழமைக்கு மாறாக ஸ்தானகக் கோலத்தில் மூலவர் அமைந்த சந்நிதானத்தில் விமானம் வட்டம் வடிவில் அமைந்துள்ளது.

மூலவரை ஸ்ரீ பரமசுவாமி என்று சொல்வர். ஒரே பீடத்தில் அவரின் இரு பக்கங்களிலும் ஸ்ரீதேவி, பூதேவி ஆகியோரின் படிமங்கள் அமைந்துள்ளன. அழகர், ஸ்ரீ சௌந்தரராஜர் என்பன உற்சவ மூர்த்தியின திருநாமங்கள்.

கர்ப்பக்கிரகத்தின் மேல் அமைந்துள்ள



திருமோகூர்

கட்டம் சோமச்சந்த விமானம் என்று சொல்லப்படும். அதன் கிழக்குப் பக்கத்திற் பிதுக்கமாய் அமைந்துள்ள மாடக்குழியிற் கருடவாகனரின் உருவம் அமைந்திருக்கின்றது. அதன் கீழ் கஜலக்ஷ்மியின் உருவம் தெரிகின்றது. சிகரத்தின் மேல் மூன்று ஸ்தூபிகள் அமைந்திருக்கின்றன.

விமானம் முழுவதும் பொன்முலாம் பூசப் பெற்றுள்ளது. இராஜகோபுரம் வெளிப் பிரகாரத்திலே இரணியன் வாசல் அமைந்துள்ள தெற்குப் பக்கத்திலே அமைந்திருக்கின்றது. தெற்குச் சுவருக்கும் கோயிலுக்கும் இடையிலே வசந்த மண்டபம் என்னும் பழைய கட்டடம் காணப்படுகின்றது. அது பதினான்காம், பதினைந்தாம் நூற்றாண்டுகளிலே கட்டப்பெற்றதாகும். அதன் விதானத்திலே வைணவ மரபிலுள்ள புராணக் கதைகளையும் இராமாயணக் கதைகளையும் விளக்கும் வண்ண ஓவியங்கள் வரையப் பெற்றுள்ளன.

அவை சமகாலத்திலே திருப்பருத்திக் குன்றத்தில் வரையப்பட்ட ஓவியங்களை ஒத்திருக்கின்றன.

## திருமோகூர்

மதுரைக்கு வடகிழக்கிலே, ஆறுமைல் தூரத்தில் அமைந்துள்ள திருமோகூர் பிரசித்தமான 108 வைணவ தலங்களில் ஒன்றாகும்.

அது நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், மணவாள மாமுனி ஆகியோரின் பாடல்களைப் பெற்றசிறப்புடைய தலம். அது மோகன ஷேத்திரம் என்று சொல்லப்படும். அங்குள்ள இறைவரைக் காளமேகப் பெருமாள் என்றும் இறைவியை மோகனவல்லித் தாயார் என்றும் சொல்வது வழக்கம்.

புராதன தலமான் திருமோகூரிலே பதினான்காம் நூற்றாண்டு முதலாக அமைக்கப் பெற்ற கட்டடங்கள் உள்ளன. ஆலயம் அளவிற் சிறியது ; அதன் பிரகாரச் சுவர்கள் வழமைக்கு மாறாக மிகவும் உயரமானவை. கோயிற் பிரகாரங்களில் அழகான மண்டபங்ள் பல காணப்படுகின்றன. அதன் கிழக்கு வாசலுக்கு அண்மையில் கம்பத்தடி மண்டபம் காணப்படுகின்றது.


அதிலே கட்டப்பொம்மனின் படைத் தலைவர்களான பெரியமருது, சின்னமருது என்போரின் அழகிய உருவச் சிலைகள் உள்ளன.

அந்த மண்டபத்திற்கு அப்பால் கருடமண்டபம் காணப்படுகின்றது. அதன் தூண்களிலே இராமர், சீதை, இலக்குமணர், இரதி, மன்மதன் ஆகியோரின் படிமங்கள் கவர்ச்சி மிக்க கோலத்தில் வடிக்கப்பட்டுள் ளன. அதனை அடுத்துள்ள மகா மண் டபத்திலே காணப்படுந் தூண்கள் விஜயநகர கலைப் பாணியில் அமைந்தனவாகும்.

காளமேகப் பெருமாள் சந்நிதானத்தின் கர்ப்பக்கிரகம் சதுர வடிவில் அமைந்துள்ளது அதிஷ்டானத்திலே பத்மதளம், குமுதம், கண்டம், கபோதம் என்னும் படைகள் காணப்படுகின்றன. சுவர்களும் அரைத் தூண்களும் வேதியின் மேற் கட்டப் பெற்றுள்ளன. மத்திய பகுதியில் அமைந்த சாலையில் மாடக்குழி அமைந்துள்ளது. அதன் இரு பக்கங்களிலும் மேற்புறத்திலே கும்ப பஞ்சரங்கள் அமைந்துள்ளன.

அரைத்தூண்களிலே கூடும் சாலையும் பொருந்தியுள்ளன. போதிகைகள் விஜயநகர கலைப்பாணியின் அம் சங்களைக் கொண்டுள்ளன. கொடுங்கை யின் மேல் வியாளமாலம் தெரிகின்றது. மகரவடிவங்கள் பல கபோதத்தின் மேல் நீட்டிய கோலத்தில் உருவாக்கப்பட்டுள்ளன. விமானம் இருதள விமானமாகும். அது வட்ட வடிவமானது. நான்கு பக்கங்களிலும் பிதுக்கமாய் அமைந்துள்ள கூடுகள் காணப்படுகின்றன. தளங்களுக்கிடையிலே சிங் கக்கூடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

அதன் வேலைப்பாடுகளின் அடிப்படையில் காளமேகப் பெருமாள் கோயில் பதினாறாம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்குரியதென்று கொள்ளத் தக்கதாகும். ஆயினும், மூலஸ்தானத்திலே பாண்டியர் கலைப் பாணியின் அம்சங்கள் சில காணப்படுகின்றன. வடகிழக்கு மூலையிலே க்ஷீராப்தி சயனர்



திருவாதவூர்

சந்நிதி அமைந்திருக்கின்றது. அதன் மண்டபத்திலே எட்டுத்தூண் வரிசைகள் உள்ளன.

அங்குள்ள தூண்களிற் புராதனமான கலைப் பாணிக்குரிய அம்சங்கள் தெரிகின்றன. தூண்கள் சதுரமானவை. அவற்றின் மேலே புராதன கால அமைப்புடைய இதழ் வடிவமும் இரட்டைப் பலகையும் அமைந்துள்ளன. நாகபந்தங்கள் அவற்றில் அமைக்கப்படவில்லை. மாடக்குழிகளின் ஓரங்களிலுள்ள குறுந்தூண்களின் மேல் தோரண வடிவந் தெரிகின்றது.

க்ஷீராப்தி சயனர் கோயில் பதின்மூன்றாம், பதினான்காம் நூற்றாண்டு களிலே கட்டப் பெற்றது என்று கருதலாம். கோயில் வளாகத்திலுள்ள சுவர்களிலே பாண் டியர் காலத்துச் சாசனங்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## திருவாதவூர்

மதுரைக்குத் தென்கிழக்கிலே, பதினாறு மைல் தூரத்தில் அமைந்திருக்கும் திருவாதவூர் சைவசமய மரபிலே மிகுந்த சிறப்புடைய் தலமாகவும் சங்கப் புலவர்களில் மிகுந்த சிறப்புப் பெற்றவரான கபிலரும் மாணிக்கவாசக சுவாமிகளும் `திருவாதவூர் வாசிகள் என்பது குறிப்பிடற்குரியது.

அங்கு பள்ளி கொண்ட உடையாரை வேதபூரிஸ்வரர் என்றும் வேதநாதர் என்றுஞ் சொல்வர். தமிழிலும் வடமொழியிலும் அதனைப் பற்றிய தல புராணங்கள் உள்ளன. கோயிலின் கர்ப்பக்கிரகம் சதுரமானது. அதன் மேல் அமைந்த விமானம் திராவிட விமானம் ஆகும். மூலஸ்தானத்திற்கு முன்னால் அர்த்த மண்டபம், மகா மண்டபம் என்பன காணப்படுகின்றன. அவற்றுக்குத் தென் புறத்திலே ஆறுகால் பீடம் என்னும் மண்டபம் அமைந்திருக்கின்றது. அதிலுள்ள தூண்கள் எண்கோண அமைப்புக் கொண்டவை. அந்த மண்டபத்திற்கு மேலே பிரமாண்ட மான பிரஸ்தரம் காணப்படுகின்றது. அது மிகப் பெரிய கற்பாளங்களைக் கொண்டு அமைக்கப் பெற்றுள்ளது. அக் கற்பாளங்கள் பத்து முதல் பதினான்கு அடி வரையான நீளங் கொண்டவை.

நடராசர் சந்நிதியின் முன்பு மிக அழகுடைய மண்டபம் அமைந்திருக்கின்றது. அதிலே யாழி வடிவங்கள் செதுக்கப் பெற்ற கலப்புத் தூண்கள் காணப்படுகின்றன. தூண்கள் விஜயநகர கலைப்பாணியில் அமைந்தவ்வ. அப்பாணிக்குச் சிறப்பம்சமாக உள்ள பல மலர் வடிவங்கள் கொண்ட புஷ்ப போதிகைகளும் அந்த நூற்றுக்கால் மண்டபத்தூண்களிலே காணப்படுகின்றன. தென் மேற்கு மூலையிலே காளீஸ்வரர் கோயில் அமைந்திருக்கின்றது. அதன் மண்டபத்திலே எண்கோண கட்டைத்தூண்கள் அமைந்துள்ளன.

தூண்களின் புஷ்பபோதிகைகள் பதினாறாம் நூற்றாண்டுக்குரிய கலைப்பாணியில் அமைந்துள்ளன. மூலஸ்தானத்திற்குச் சமீபத்திலே திருக்காமகோட்டம் அமைந்திருக்கின்றது. மேற்குப் பிரகாரச் சுவரின் அருகிலே சப்தமாதரின் படிமங்கள் காணப்படுகின்றன. வடக்குச் சுவரின் அருகிலே திருவாதவூரடி களின் படிமம் சிதைவுற்ற நிலையிலே காணப்படுகின்றது. காளமேகப் பெருமாள் கோயிலின் மூலஸ்தானமும் மண்டபங்களும் வனப்பு மிகுந்த கோலத்துடன் அமைக்கப் பெற்றுள்ளன.

பேராசிரியர் சி.பத்மநாதன்

விஜயநகர கலைப் பாணி யின் உன்னதமான பண்புகளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்களாக அவை விளங்குகின்றன. பாண்டி நாட்டிலே விஜயநகரப் பேரர சின் காலத்திற் பல புதிய ஆலயங்கள் அமைக்கப்பட்டதோடு புராதனமான தலங்கள் பலவற்றிற் கட்டடங்கள் புனர் நிர்மாணம் பெற்றன.

மதுரைப் பெரிய கோயிலும் விஜயநகர காலக் கலைப்பாணியில் அமைந்த மண்டபங்களும் சந்நிதானங்களும் கோபுரங்களும் அமைந்துள்ளமை குறிப்பிடற்குரியதாகும்.

அவற்றை அடிப்படையாகக் கொண்டு மதுரை நாயக்கரின் ஆட்சிக் காலத்திலே திராவிடக் கலைப்பாணியின் வளர்ச்சி நிறைவு பெற்றது. (தொடரும்)

''விஜயநகரப் பேரரசும் கலாசார மறுமலர்ச்சியும்'' ஆய்வுத்தொடரில் நாளை பேராசிரியர் சி.பத்மநாதனின் ''நாயக்கர் கலைப்பாணி'' ஆய்வுக் கட்டுரை இடம்பெறும்.

நீ எதை விழுங்க முடியும், உன்னை எது-விழுங்க முடியும் என்பதை நீ பார்க்க வேண்டும்.

~ இந்தியா

வலம்புரி

## அன்பான தமிழ் அரசியல்வாதிகளே சிந்தித்துச் செயற்படுங்கள்

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின் அதிகூடுதலாக குழம்பிப் போனவர்கள் யார் என்று ஓர் ஆய்வு நடத்தினால், தமிழ் அரசியல் வாதிகள்தான் அதிகம் குழம்பியவர்கள் என்ற முடிபைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அந்தளவுக்கு ஜனாதிபதித் தேர்தல் தமிழ் மக்களைக் குழப்பி விட்டுள்ளது. இக் குழப்பத்திற்கு நியாயமான காரணங்கள் உண்டென்பது மறுக்க முடியாத உண்மை.

அதாவது, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் முக்கிய வேட்பாளர்கள் இருவரும் தமிழ் மக்களுக்கு எதிராக யுத்தம் நடத்தியவர்கள். எனவே அவர்களை எங்ஙனம் ஆதரிப்பது என்ற கேள்வி தமிழ் அரசியல் தரப்பில் ஏற்பட்ட குழப்பதிற்கான முக்கிய காரணமாக இருக்கலாம்.

எனினும் ஒரு காரணத்தை வைத்துக் கொண்டு முடிபை எடுப்பது அல்லது தவறான முடிபை எடுப்பது தமிழ் மக்களை மேலும் பாதிப்புக்குள்ளாக்கும்.

ஆகவே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் முக்கியமான இரு வேட்பாளர்களில் ஒருவரே ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படவுள்ளார். இந்த உண்மையை எவரும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

எல்லோருக்கும் தெரிந்த உண்மையை விலத்தி விட்டு அதற்குப் புறம்பான முடிபொன்றை எடுப்பதாயின் அதனால் தமிழ் மக்களுக்கு ஏதேனும் நன்மையுண்டாக வேண்டும்.

அவ்வகையில் ஜனாதிபதித் தேர்தலில் வெல்லக் கூடிய இருவரில் ஒருவரை ஆதரிப்பதை விட்டுவிடுவதென முடிபெடுப்பதாயின் அதனை இருவகையில் மேற்கொள்ள வேண்டும்.

அதில் ஒன்று, தேர்தலைப் பகிஷ்கரித்தல், மற்றையது மூன்றாவது வேட்பாளரை ஆதரித்தல். இந்த இரண்டு விடயத்தாலும் தமிழ் மக்களுக்கு ஏதேனும் நன்மையுண்டா? என ஆராய்ந்தால் அது பூச்சியப் பெறுமானத்தையே காட்டி நிற்கும்.

எனவே ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறும் வாய்ப்புடைய ஒருவரைத் தெரிவு செய்வது உகந்ததாகும். இங்குதான் யாரைத் தெரிவு செய்வதென்ற பிரச்சினை ஏற்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரு முக்கிய வேட்பாளர்களில் எவர் ஜனாதிபதியாகப் பதவியேற்றாலும் தமிழ் மக்களுக்கு எந்த வகையிலான தீர்வுத் திட்டத்தையும் முன்வைக்க மாட்டார் என்பது தெரிந்த உண்மை.

இந்த உண்மைகளைத் தெரிந்து கொண்டு அதனைத் தமிழ் மக்களுக்கு வெளிப்படையாகக் கூற வேண்டும்.

அதேநேரம் இந்த நாட்டில் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுபவர் இனப்பிரச்சினைக்குத் தீர்வு தர மாட்டார் என்பதை தெரிந்து கொண்டும் ஒருவரை ஆதரிக்கின்றோம்,

ஏனெனில் அவர்,

❖ தமிழ் மக்களை மிக மோசமாக வருத்தியதில் சற்றுக் குறைவான இடத்தைப் பெற்றுள்ளார்.

❖ இவர் ஆட்சிக்கு வந்தால்... இத்தகைய விடயங்கள் நாட்டில் நடக்கும்.

இவை நாட்டில் நடந்தால்,அவை ஏதோவொரு வகையில் தமிழ் மக்களுக்கும் பயன்தரும்.

என்றவாறு ஆதரவுக்கான விளக்கம் தரப்பட வேண்டும். இதை விடுத்து சொந்த விருப்பு வெறுப்புக்களை அரசியலில் பொதுமையாக்க முற்பட்டால் மீண்டும் கண்ணீர், துன்பம், துயரம்.

அன்பான தமிழ் அரசியல்வாதிகளே சிந்தித்துச் செயற்படுங்கள்.

# நாட்டின் முக்கால் பங்கு வளங்களை ஜனாதிபதியே நிர்வகிக்கின்றார்

## காமினி ரத்நாயக்க

(கொழும்பு)

நாட்டின் 75 வீதமான வளங்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே நிர்வாகம் செய்து வருவதாக ஜே.வி.பி. யின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி ரத்நாயக்க தெரி வித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையின் கீழ் நீதி மன்றங்களின் பலம் வெகுவாக குறைந்துள்ளதாக சுட்டிக் காட்டியுள்ள அவர் நிறைவேற்று அதிகாரமுறைமை என்ற சாபத்தை நாட்டுக்கு அறிமுகப்படுத்திய ஐக்கிய தேசியக் கட்சியினர் இந்த முறைமையின் பயங்கரத்தை விளங்கிக் கொண் டமை பாராட்டுக்குரியதெனவும் குறிப்பிட்டுள்ளார்.

17 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை அமுல்படுத்தல், இடம் பெயர் மக்களை மீள் குடியேற்றல், அவசரகாலச் சட்டத்தின் மூலம் கைது செய்யப்பட்டவர்களுக்கு நியாயம் வழங்குதல், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லா தொழித்தல் ஆகிய முக்கிய விடயங்களை ஜெனரல் சரத் பொன்சேகா பதவிக்கு வந்ததன் பின்னர் நிறைவேற்ற வேண்டுமென தெரிவித் துள்ளார்.

தற்போது ஜனாதிபதி நாளொன்றுக்கு 191 கோடி ரூபா செலவிடுவதாகவும் நாட் டில் இடம்பெற்ற மிகப் பெரிய வெட் மோசடி குறித்து ஜே.வி.பி அம்பலப்படுத்திய போதிலும் இது வரையில் குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

1970 ஆம் ஆண்டு முதல் 2005 ஆண்டு வரையில் ஜனாதிபதிக்கு கொழும் பில் ஒரு அங்குலம் நிலமேனும் இருக்கவில்லை எனவும் தற்போது பாதிக்கு பாதி ராஜபக்ஷ குடும்பத்தாருக்கு சொந்தமாகி யுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(2-6)

## அதிபர்களுக்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட்பட்ட கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம், சென் ஜேம்ஸ் பெண்கள் வித்தியாலயம், சென் ஜேம்ஸ் ஆண்கள் வித்தியாலயம், இந்து மகளிர் கல்லூரி, இந்துக்கல்லூரி, வைத்தீஸ்வரா வித்தியாலயம், சன்மார்க்க வித்தியாலயம், புனித மரியாள் வித்தியாலயம், கலட்டி ஜி.ரி.எம்.எஸ் வித்தியாலயம் ஆகிய பாடசாலை அதிபர்களிற்கான கூட்டம் யாழ்.மாநகர சபை மாநாட்டு மண்டபத்தில் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளதால் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (சு)

## புகலிடம்கோரிய 8 பேர் விடுதலை

கனேடிய குடிவரவு, குடியகல்வு அதி காரிகளினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்கள் 8 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கனடிய அரசு அங்குள்ள இலங்கைத் தூத ரகத்துக்கு இது பற்றி அறிவித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவிக்கிறது.

இந்தப் புகலிடக் கோரிக்கையாளரை மீண்டும் இலங்கைக்கு வரவழைப்பதற்கான நட வடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக வெளி விவகார அமைச்சு குறிப்பிடுகிறது.

படகு மூலம் கனடாவுக்குள் நுழைய முற்பட்ட இலங்கையைச் சேர்ந்த புகலிடக் கோரிக்கையாளர்கள் 76 பேர் அந்நாட்டின் குடி வரவு, குடியகல்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தொடர்பாக கனேடிய அரசு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (2-6)

## ACCA நிறுவனத்தின் புலமைப்பரிசில் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

ACCA பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் புலமைப் பரிசில் பரீட்சை நாளை காலை 10 மணிக்கு யாழ்.நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறும். இதுவரையும் பரீட்சை அனுமதி அட்டை கிடைக்காதவர்களும் இப் பரீட்சைக்கு தோற்றுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (சு)

## நாடகமும் அரங்கியலும் தர வட்ட கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கல்வி வலய, நாடகமும் அரங்கியலும் பாடவிதானத்தினை கற்பிக்கும் ஆசிரியர்களுக்காக மாதாந்தம் நடத்தப்பட்டுவரும் தரவட்ட கருத்தமர்வு நாளை புதன்கிழமை காலை 9.00மணி முதல் மதியம் 1.30மணிவரை யாழ்.கல்வித்திணைக்கள கேட்போர் கூடத்தில் நடத்தப்படவுள்ளது.

2009ஆம் ஆண்டு க.பொ.த(சா/த)வில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் தோற்றியவர்களுக்கு நடைபெற இருக்கின்ற செயல்முறை பரீட்சை தொடர்பான விடயம் மேற்படிக் கருத்தமர்வில் கலந்துரையாடப்படவுள்ளது.

கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம் இக்கருத்தமர்வுக்கு வள வாளராக கலந்து கொள்ளவுள்ளார். யாழ். கல்வி வலயத்தில் நாடக பாடத்தை கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களும் அழைக்கப்பட்டுள்ளதோடு ஆர்வமுடைய ஏனைய வலய ஆசிரியர்களும் கலந்து கொள்ளலாமென யாழ்.வலய கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (சு)

## யாழ்.குடாநாட்டுக்கு ஏ-9 ஊடாக காட்டு மரங்கள்

(யாழ்ப்பாணம்)

தென்பகுதியிலிருந்து ஏ-9 நெடுஞ்சாலையூடாக யாழ் குடாநாட்டுக்கு பாரிய காட்டு மரங்கள் எடுத்து வரப்படுகின்றன.

இந்தக் காட்டு மரங்கள் தினந்தோறும் கனரக வாகனங்கள் மூலம் எடுத்துவரப்படுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

யாழ். குடாநாட்டில் அசுர அபிவிருத்தி வேலைகள் இடம் பெற்று வரும் இந்தருணத்தில் மரங்களின் தேவைகளும் அதிகரித்து வருகின்றன.

இந்நிலையில் இவ்வாறு எடுத்துவரப்படும் காட்டு மரங்களுக்கு யாழ். குடாநாட்டில் நல்ல கிராக்கி நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் யாழ் குடாநாட்டில் நின்ற மரங்கள் எல்லாம் அழிக்கப்பட்டு அபிவிருத்தி வேலைகளுக்கு பயன்படுத்தப்பட்ட நிலையில் இம்மரங்கள் எடுத்து வரப்படுவது மரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஓ-49)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



### கல்வியும் சமுதாயமும்

இந்து மதத்தைச் சேர்ந்தவன் குடிப்பதும் மத வாழ்க்கையை ஒட்டித்தான்; நடப்பதும் மத வாழ்க்கையை ஒட்டித்தான் ; திருமணம் செய்துகொள்வதும் மத வாழ்க்கையை ஒட்டித்தான் ; கொள்ளையடிப்பதும் மத வாழ்க்கையை ஒட்டித்தான்.

ஒவ்வொரு நாடும் உலகிற்கு ஆற்ற வேண்டிய பணி ஒன்று உண்டு. அந்தப் பணிக்குத் தீங்கு நேராத வகையில் எத்தகைய துன்பங்கள் வந்தாலும் அந்த நாடு நிலைத்து வாழும். ஆனால் அந்தப் பணிக்கு அழிவு வந்தவுடனே அந்த நாடு சிதைந்து விடுகிறது.

கற்பு நிலையிலிருந்து வழுவதுதான் ஒரு நாட்டின் அழிவிற்கு முதல் அறிகுறி என்பதை வரலாற்றில் நீ பார்க்கவில்லையா? கற்புத் தவறுதல் என்ற கேடு சமுதாயத்தில் நுழையும் பொழுது அந்த இனத்திற்கு முடிவுக்காலம் நெருங்குவது தெளிவாகிவிடுகிறது.

இப்போது நாம் விலங்குகளைவிட அகதி அளவில் ஒழுக்கமானவர்களாக இல்லை. சமுதாயத்தின் கட்டுப்பாடு என்னும் சாட்டையடிகளால்தான் நாம் அமுத்தி அடக்கி வைக்கப்பட்டிருக்கிறோம். இன்று சமூகம், *நீ திருடினால் நான் உன்னை தண்டிக்கப்போவதில்லை* என்று சொல்லி விடுமானால், உடனே நாம் விரைந்து ஒருவர் மற்றொருவருடைய சொத்துக்களைப் பறிப்பதற்காகப் பாய்ந்து ஓடுவோம். பொலிஸ்காரர்கள் தாம் நம்மை நல்ல ஒழுக்கம் உடையவர்களாக வைத்திருக்கிறார்கள். சமுதாயத்தின் பொது அபிப்பிராயம் தான் நம்மை ஒழுக்கமுள்ளவர்களாக வைத்திருக்கிறது. உண்மையில் மிருகங்களைவிட நாம் சிறிதும் உயர்ந்தவர்களாக இல்லை.

## வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்காக

# விசா விதிமுறையை தளர்த்த சவூதி அரேபியா முடிபு

(டுபாய்)

சவூதி அரேபியாவில் பணிபுரியும் வெளிநாட்டு தொழிலாளர்கள் தங்களது குடும்பத்தை அழைத்துவந்து தங்களுடன் நிரந்தரமாகத் தங்கவைத்துக்கொள்ளும் வகையில் விசா விதிமுறையை தளர்த்த அந்நாட்டு அரசு முடிவெடுத்துள்ளது.

பழைய முறைப்படி மருத்துவர், பொறியலாளர் உட்பட சில முக்கிய பதவிகளை வகிப்போர் மட்டுமே தங்களது குடும்பங்களை அழைத்து வந்து நிரந்தரமாகத் தங்க வைத்துக்கொள்ள முடியும். அத்துடன் தொழிலாளர்கள் வசிக்கும் பதவியின் அடிப்படையில்தான் அவர்களது குடும்பத்தாருக்கு சுற்றுலா விசாவும் அளிக்கப்பட்டு வந்தது.

ஆனால் புதிய முறைப்படி தொழிலாளர்கள் தங்களது குடும்பத்தை சுற்றுலாவுக்கோ, நிரந்தரமாக அழைத்துவர விசா வழங்குவதற்கு அவர்கள் வகிக்கும் பதவி கருத்தில் எடுத்துக்கொள்ளப்படாது .அவர்களின் நிதி நிலைமை மட்டும் கருத்தில் கொள்ளப்படவுள்ளது.

சவூதி அரசின் இந்த முடிவு அங்கு பணியாற்றும் இலட்சக்கணக்கான வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சவூதி அரசின் அறிவிப்பு வெளியானதுமே வெளிநாட்டு தொழிலாளர்கள் அங்குள்ள தங்களது நாட்டின் தூதரகங்களுக்கு படையெடுக்க ஆரம்பித்துள்ளனர். தங்களது குடும்பத்தை அழைத்து வருவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து ஆலோசனை கேட்டு வருகின்றனர்.




பெரும்பாலானோர் தங்களது பாஸ்போர்ட்டில் தங்களது மனைவியின் பெயரை சேர்ப்பதில் ஆர்வமாக உள்ளனர். இதில் அதிகமானோர் திருணமாகி ஓரிரு ஆண்டுகளே ஆனவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (2-6)

# பாகிஸ்தானில் ஒரே நாளில் இரு இடங்களில் தற்கொலை தாக்குதல்

## 15 பேர் பலி; 135 பேர் காயம்

(கராச்சி)

பாகிஸ்தானில் உள்ள நகரங்களில் தற்கொலை தீவிரவாதிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர். மொக ரம் பண்டிகையையொட்டி ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள முசாபராபாத்தில் இமாம்பராவில் நேற்று முன்தினம் பேரணி நடந்தது.

இதில் ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் கலந்துகொண்டனர். அப்போது பேரணியில் இருந்து திடீரென ஒரு தற்கொலை தீவிரவாதி வெளியேறினான்.



அவன் பாதுகாப்பு பணியில் ஈடு பட்டிருந்த பொலிஸார் மற்றும் இரா ணுவ வீரர்கள் பகுதிக்கு ஓடோடிச் சென்று தனது உடலில் கட்டியி ருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்தான்.

இந்த தாக்குதலில் 15 பேர் பலியானார்கள் ; 100 பேர் காயம் அடைந்தனர். பலியானவர்களில் 2 பேர் பொலிஸ்காரர்கள் எனவும் மற்றவர்கள் பேரணியில் கலந்து கொண்ட பொது மக்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த பேரணியில் சுமார் ஆயிரம் பேர் கலந்து கொண்டனர். அவர்களை ஒவ்வொருவராக பொலிஸார் சோதனை நடத்தினர். அப்போது தற்கொலை தீவிரவாதி தனது உடலில் கட்டியிருந்த வெடிகுணடை வெடிக்கச் செய்தான் என பொலிஸ் அதிகாரி தாஹிர் குவாயும் தெரிவித்தார்.

இச்சம்பவத்தை தொடர்ந்து பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பில் உள்ள ஆசாத் காஷ்மீரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை கராச்சியில் நடந்த மொகரம் பேரணி நடைபெற்ற இடத்தின் அருகே மனித குண்டுதாக்குதல் நடந்தது. இதில் 35 பேர் படுகாயம் அடைந்தனர். காயம் அடைந்தவர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஓ-6)

# கப்பல் மூழ்கியதில் 25 பேரைக் காணவில்லை

(மணிலா)

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் இருந்து 88 பயணிகளுடன் புறப்பட்டுச் சென்ற கப்பலொன்று படாங்கல் நகர அருகே சென்றபோது திடீரென கடலில் மூழ்கியுள்ளது.

இது பற்றி கடலோர காவல்படையினருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. உடனே அவர்கள் படகில் விரைந்து வந்து மூழ்கிய கப்பலிலிருந்து 63 பேரை காப்பாற்றினார்கள்.

கப்பலில் பயணம் செய்த மேலும் 25 பேரை காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. அவர்களை தேடும்பணி நடைபெற்று வருகிறது.

அளவுக்கதிகமான ஆட்களை ஏற்றியமையே கப்பல் மூழ்கக்காரணம் என விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (6)

# இளமையான முகத்தோற்றமுடைய நபர்களுக்கு ஆயுள் கெட்டி

## ஆய்வில் தகவல்

இளமையான முகத்தோற்றமுடைய நபர்களுக்கு ஆயுள் கெட்டியென விஞ்ஞான ஆராய்ச்சிகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. தமது வயதை விடவும் இளமையான தோற்றத்தை உடையவர்கள் நீண்ட ஆயுளைக் கொண்டிருப்பார்கள் எனக் குறிப்பிடப்படுகிறது.

வயதிற்கு மேலான முதிய தோற்றத்தை உடையவர்களை விடவும் இளமையான தோற்றமுடையவர்கள் நீண்ட காலம் வாழ்வதற்கான சாத்தியம் காணப்படுவதாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். டென்மார்க்கைச் சேர்ந்த விஞ்ஞானிகளினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் மூலம் இந்த விடயம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மரபணுக்களின் மாற்றமே இளமையான தோற்றத்திற்கு காரணம் எனக் குறிப்பிடப்படுகிறது.

இதன் பிரகாரம் கடுமையாக உழைப்பவர்கள் துரித கதியில் முதுமையை எட்டுவதாகவும் பல்வேறு நோய்களினால் பாதிக்கப்படுவதாகவும் ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ஓ-2-4)

# டிக்கெற் எடுக்காமல் பயணம்

## விமான கழிப்பறையில் பதுங்கிய பயணி

சவுதி அரேபியாவின் மதீனா விமான நிலையத்தில் இருந்து ஏர் இந்தியா விமானம் ஜெய்ப்பூருக்கு புறப்பட்டது. ஹஜ் பயணம் சென்ற 273 இந்தியர்கள் அந்த விமானத்தில் ஜெய்ப்பூர் திரும்பினார்கள்.

விமானம் புறப்பட்ட அரை மணி நேரத்தில் விமான பயணி ஒருவர் கழிவறை சென்றார். அப்போது அங்கு ஒரு வாலிபர் பதுங்கி இருப்பதை பார்த்து அதிர்ச்சி அடைந்தார். இதனால் விமானத்தில் பரபரப்பு ஏற்பட்டது. அவரிடம் பயண டிக்கெட்டோ பாஸ் போட்டோ இல்லை. உடனே விமானிகள் அந்த வாலிபரை பிடித்து வைத்துக்கொண்டு ஜெய்ப்பூர் விமான நிலையத்துக்கு தகவல் கொடுத்தனர்.

அவன் விமானத்தில் யாருக்கும் எந்த தொந்தரவும் கொடுக்கவில்லை. அரைமணி நேரம் கழிவறையில் இருந்திருக்கிறான். அவனிடம் விமானிகள் விசாரித்தபோது தனது பெயர் ஹபீப் (25) என்றும் உத்தர பிரதேச மாநிலம் மொரதாபாத்தைச் சேர்ந்தவன் என்றும் தெரிய வந்தது.

மதீனா விமான நிலையத்தில் துப்பரவு தொழிலாளியாக வேலை பார்த்து வருகிறார். ஏர் இந்தியா விமானத்தில் துப்பரவு பணி செய்வதற்காக அழைக்கப்பட்டார். ஆனால் அவன் கழிவறையில் இருந்த போது விமான்ம் புறப்பட்டு சென்றது. இதனால் கழிவறையிலேயே பதுங்கி கொண்டார். பயணி சென்ற போது தான் ஹபீப் உள்ளே இருப்பது தெரிய வந்தது.

விமான ஜெய்ப்பூர் வந்ததும் தயாராக இருந்த பொலீசாரும் அதிகாரிகளும் ஹபீப்பை



கைது செய்தனர். அவனிடம் உளவுத்துறை பொலீசாரும் ராஜஸ்தான் சிறப்பு அதிரடிப் படை பொலிசாரும் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

இந்தச் சம்பவம் விமான ஊழியர்களின் அஜாக்கிரதை மற்றும் பாதுகாப்பில் கவனக் குறைவை காட்டுவதாக உள்ளது என்று விமான பயணிகள் தெரிவித்தனர். (2-6)

## ஈரானில்

# அரசுக்கெதிரான கலவரத்தில் 15 பேர் கொல்லப்பட்டுள்ளனர்

(டெஹ்றான்)

ஈரானில் ஏற்பட்ட அரசுக்கெதிரான போராட் டத்தில் 15 பேர் கொல்லப்பட்டனர். பலர் காய முற்றனர்.

ஈரானில் அசௌரா என்ற திருவிழா கொண்டாடப்படுகிறது.அரசுக்கு எதிரான போராட்டம் நடைபெற்றபோது அங்கு கலவரம் வெடித்தது. இதில் 15 பேர் கொல்லப்பட்டுள்ளனர். பலர் காயமுற்றனர். பல இடங்களில் பாதுகாப்பு படையினரும், கலவரக் காரர்களும் மோதிக்கொண்டனர். இதில் எதிர்க்கட்சி தலைவர் மொசாவி என்பவரது உறவினர் ஒருவரும் கொல்லப்பட்டுள்ளார். பொலிஸ் வாகனங்கள் பல தீவைத்துக் கொளுத்தப்பட் டுள்ளன.

இறந்தவர்கள் பொலிஸாரால் கொல்லப்படவில்லை என பொலிஸ் தரப்பினர் தெரிவித்துள்ளனர். சிலர் பாலத்தில் வைத்துக் கொல்லப்பட்டுள்ளதாகவும், இதில் சிலர் புரட்சி எதிர்ப்பு பயங்கரவாதிகள் என்றும் கூறப்படு கிறது.

தொடர்ந்து அங்கு நகர்ப் பகுதிகளில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் அங்கு செய்திசேகரிப்பில் ஈடுபட்டிருந்த டுபாய் தொலைக்காட்சி செய்தியாளர் ஒருவர் காணாமல் போய்விட்டதாகக் கூறப்படுகிறது. இவர் கலவரத்தில் இறந்தாரா என விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (2-6)

# லெபனானில் குண்டுவெடிப்பு 2 ஹமாஸ் தீவிரவாதிகள் பலி

லெபனானில் பெய்ரூட் நகரில் கடந்த சனிக்கிழமை இரவு சக்தி வாய்ந்த குண்டு வெடித்தது. இதில் ஹமாஸ் தீவிரவாதிகள் 2 பேர் உயிரிழந்துள்ளனர். 2 பேர் காயமடைந்துள்ளனர்.

ஹமாஸ் தீவிரவாதிகளின் அலுவலகம் அருகேயுள்ள வாகனம் நிறுத்துமிடத்தில் இந்த குண்டு வெடித்தது. இதில் அந்த அமைப்பின் பாதுகாவலர்கள் ஹசன் ஹாடட்,பஸ்செல் ஜோமா ஆகியோர் பலியானார்கள். இந்த தகவலை ஹமாஸ் அமைப்பின் பிரதிநிதி ஒசாமா ஹாம்மன் தெரிவித்துள்ளார்.

தற்போது குண்டு வெடித்த இடத்தை பெய்ரூட் பொலிஸார் பார்வையிட்டு விசாரணை நடத்தி வருகின்றனர். (2-6)

# டெஸ்ட் தரவரிசையில் இந்திய அணி தொடர்ந்து முதலிடத்தில் இருக்கும்

## விருதைப் பெற்றுக் கொண்டபின் தோனி கருத்து




டெஸ்ட் சிறந்த அணிகள் தரவரிசைப் பட்டியலில் நம்பர்-1 இடத்துக்கு முன்னேறிய இந்திய அணிக்கு இந்த ஆண்டுக்கான ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் விருது டில்லியில் நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

இவ்விருதை இந்திய அணித்தலைவர் தோனிக்கு ஐ.சி.சி. தலைமை நிர்வாகி ஹாரூன் லார்கட் வழங்கினார். சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) ஆண்டுதோறும் சிறந்த டெஸ்ட் அணிக்கு சம்பின்ஷிப் விருது வழங்கி கௌரவிக்கும்.

கடந்த ஆண்டு 2008-09 ஆம் ஆண்டுக்கான விருதை அவுஸ்திரேலிய அணி பெற்றது. இந்த ஆண்டுக்கான (2009-10) விருது சமீபத்தில் டெஸ்ட் தரவரிசைப்பட்டியலில் முதலிடத்துக்கு முன்னேறிய இந்திய அணிக்கு வழங்கப்பட்டது. இதற்கான விழா டில்லியில் நேற்று முன்தினம் நடந்தது.

இவ்விழாவில் இந்திய அணித்தலைவர் தோனி, துணைத்தலைவர் சேவாக் ஐ.சி.சி. தலைமை நிர்வாகி ஹாரூன் லார்கட் உள்ளிட்டோர் பங்கேற்றனர். டெஸ்ட் சம்பியன்ஷிப் விருதை லார்கட் இந்திய அணித்தலைவர் தோனியிடம் வழங்கி கௌரவித்தார்.

இது குறித்து இந்திய அணித்தலைவர் தோனி கூறியதாவது,

இந்த ஆண்டுக்கான ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் விருதை பெற்றது மகிழ்ச்சி அளிக்கிறது. இவ்விருதை இந்திய அணி மற்றும் இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.) சார்பாக நான்பெறுவதில்பெருமகிழ்ச்சிஅடைகிறேன்.

கடந்த 14 மாதங்களாக இந்திய அணி கடுமையாக போராடி தரவரிசையில் முதலிடத்துக்கு முன்னேறியதன் மூலம் தற்போது இவ் விருது கிடைத்தது.

தொடர்ந்து தரவரிசைப் பட்டியலில் நம்பர்-1 இடத்தை தக்க வைத்துக்கொள்ள இனி வரும் போட்டிகளில் கூடுதல் திறமையை வெளிப்படுத்துவோம்.

அடுத்த ஆண்டு பங்களாதேஷ் அணிக்கு எதிராக இரண்டு டெஸ்டில் விளையாட உள்ளோம். தவிர தென்னாபிரிக்காவுடன் இரண்டு டெஸ்ட் போட்டியில் விளையாடுவது குறித்து இரு அணிகளின் கிரிக்கெட் சபைகள் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன.

எனவே அடுத்த ஆண்டு நான்கு டெஸ்ட் போட்டிகளுக்கு மேல் பங்கேற்று டெஸ்ட் அரங்கில் ஆதிக்கம் செலுத்துவோம். ஒரு நாள் மற்றும் இருபது-20 போட்டிகளை காட்டிலும் டெஸ்ட் போட்டியில் விளையாடுவது மிகவும் கடினமானது.

ஒருநாள் மற்றும் இருபது-20 போட்டிகளில் அன்றே முடிபு கிடைத்து விடும் என்பதால் அன்றைய தினம் முழுதிறமையை வெளிப்படுத்தினால் போதுமானது. டெஸ்ட் போட்டியில் ஐந்து நாள்களும் முழுத்திறமையை வெளிப்படுத்த வேண்டும். அப்போது தான் வெற்றிபெற முடியும்.

இந்திய அணியின் பந்துவீச்சு சிறப்பாகவே உள்ளது. சகிர்கான், சிறிசாந்த் உள்ளிட்டோர் எழுச்சி கண்டிருப்பது வரவேற்கத்தக்கது. இஷாந்த் சர்மா பந்துவீச்சில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இந்திய அணியின் களத்தடுப்பு சில நேரங்களில் தடுமாற்றம் அடைகிறது. இதனை எளிதில் சரிபடுத்திவிடலாம்.

இந்திய அணியின் முன்னேற்றத்துக்கு ஆரம்ப வீரர் சேவாக்கின் அதிரடி ஆட்டம் ஒரு காரணம். இனிவரும் நாட்களிலும் இவரது பங்களிப்பு இந்திய அணிக்கு தேவைப்படுகிறது. விராத் ஹோலி, காம்பீர் போன்ற வீரர்கள் அசத்தி வருவதால் இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசை மேலும் வலுவடைந்துள்ளது. இவ்வாறு தோனி கூறினார்.

## 2009 ஆம் ஆண்டில்

### அதிக போட்டிகளில் வெற்றி இந்திய அணி சாதனை

(மும்பை)

இந்தியக் கிரிக்கெட் அணி இந்த ஆண்டு அதிக ஒரு நாள் போட்டிகளில் வென்று சாதனை படைத்துள்ளது.

இலங்கையுடன் நடந்த ஒரு நாள் தொடரில் இந்திய அணி 3:1 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது.

இதன் மூலம் இந்த ஆண்டு இந்திய அணி 31 ஒரு நாள் போட்டிகளில் விளையாடியுள்ளது.

இதில் 17 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளது. 10 போட்டிகளில் தோல்வியைச் சந்தித்துள்ளது. 4 போட்டிகளில் முடிபு தெரியவில்லை.

சதவீத அடிப்படையில் பார்க்கும் போது இந்திய அணி 62.96 சத வீதம் வெற்றியை பெற்றிருக்கின்றது. இதில் உலகில் வேறு எந்த அணியும் செய்யாத சாதனையாகும்.

இதேவேளை இலங்கை அணி இந்த ஆண்டு 27 போட்டிகளில் விளையாடி 12 போட்டிகளில் வெற்றியும் 14 போட்டிகளில் தோல்வியையும் சந்தித்துள்ளது.

ஒரு போட்டி முடிபு தெரியவில்லை. வெற்றி சதவீதம் 46.15 ஆகும்.

# பாகிஸ்தான் முதல் இன்னிங்ஸில் சொதப்பல் அவுஸ்திரேலிய அணி பலமான நிலையில்

(மெல்போர்ன்)

பொல்லிங்கர்-ஜோன்ஸன் ஜோடியின் துல்லியமான பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்ஸில் 258 ஓட்டங்களை மாத்திரம் எடுத்துச் சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதன் மூலம் அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் 196 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலைபெற்றது. அவுஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 3 டெஸ்ட்; 5 ஒரு நாள் போட்டிகள் மற்றும் ஒரேயொரு இருபது-20 போட்டி கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் கடந்த 26 ஆம் திகதி மெல்போர்னில் ஆரம்பமானது. இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களையிழந்து 454 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஹட்ரிச் 98 ஓட்டங்களையும் வோட்ஷன் 93 ஓட்டங்களையும் மைக்கல் ஹசி 81, ஹயூரிச் 75 ஓட்டங்களையும் அணித் தலைவர் பொன்டிங் 57 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் மொகமட் ஆஸிப் 2 விக்கெட்டுக்களையும் ரயூப், அஜ்மல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 258 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் மிஸ்பா உல் ஹக் ஆட்டமிழக்காமல் 65 ஓட்டங்களையும் உமர் அக்மல் 51 ஓட்டங்களையும் சல்மான் பட் 45 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்து வீச்சில் பொல்லிங்கர், ஜோன்ஸன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் சிடில் 2 விக்கெட்டுக்களையும் ஹயூரிச், வோட்ஷன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதன் மூலம் முதலாவது இன்னிங்ஸில் 196 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்ற நிலையில் 2-வது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிபில் 3 விக்கெட்டுக்களையிழந்து 111 ஓட்டங்களை எடுத்தது.

இதில் வோட்ஷன் 64 ஓட்டங்களையும் மைக்கல் கிளார்க் 21 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர். பந்து வீச்சில் மொகமட் அமீர் 2 விக்கெட்டுகளையும் மொகமட் ஆஸிப் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.



4 ஆம் நாள் ஆட்டமான இன்று அவுஸ்திரேலிய அணி 2-வது இன்னிங்ஸில் 7 விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் 307 ஓட்டங்களால் முன்னிலையில் உள்ளது.

# குக் சிறப்பான சதம் இங்கிலாந்து முன்னிலை

குக் சிறப்பான சதம் அடிக்க இங்கிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் 43 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றது.

தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிபடைந்த நிலையில் 2-வது டெஸ்ட் கடந்த 26 ஆம் திகதி டர்பனில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி முதலாவது இன்னிங்ஸில் 343 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் அணித் தலைவர் சிமித், கலிஸ் ஆகியோர் தலா 75 ஓட்டங்களையும் ஏ.பி.டி. வில்லியர்ஸ் 50, ஸ்ரையன் 47, பௌச்சர் 39 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் சுவான் 4 விக்கெட்டுக்களையும் அன்டர்சன், பிரோட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் ஒனியன்ஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் இங்கிலாந்து அணி நேற்றைய 3 ஆம் நாள் ஆட்ட நேர முடிபில் 5 விக்கெட்டுக்களையிழந்து 386 ஓட்டங்களை எடுத்தது.

இதில் குக் 118 ஓட்டங்களையும் ஹொலின்வூட் 91 ஓட்டங்களையும் அணித் தலைவர் ஸ்ரொரஸ் 54 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்ததுடன் பெல் 55 ஓட்டங்களையும் பிறிர் 11 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

பந்து வீச்சில் மோர்கல் 3 விக்கெட்டுக்களையும் ஹரிஸ், டுமினி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இப் போட்டியில் இங்கிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்கள் கைவசம் உள்ள நிலையில் 43 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையில் உள்ளது.

இன்று போட்டியின் 4 ஆம் நாள் ஆட்டமாகும்.

# தமிழ்க் கல்வி அபிவிருத்தி...

பிரதியமைச்சர் சச்சிதானந்தன் நேற்று அறிவித்திருந்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் உபதலைவர்களில் ஒருவராக கடமையாற்றும் பிரதியமைச்சர் இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

வடக்கு, கிழக்கு, மலையகம் உள்ளிட்ட தமிழ்க் கல்வி அபிவிருத்தி தொடர்பில் மேற்கொள்ளும் எந்தவொரு செயற்றிட்டத்திற்கும் ஒத்துழைப்பு அற்ற நிலையில் கல்வி அமைச்சு அக்கறையின்றி செயற்படுகின்றது. இது குறித்து கல்வி அமைச்சர், அமைச்சின் செய லாளர் ஆகியோர் பதில்கூற வேண்டும்.

தேர்தல் காலத்தில் மட்டும் தமிழ் மக்களின் தோழர்களாகவும் உறவுகளாகவும் வர்ணித்து நடித்துவரும் சிலர் எமது மக்களின் கல்வியில் அக்கறை கொண்டுள்ளார்களா? என்றால் அது இல்லை.

கடந்த நான்கு வருடங்களாக கல்வி அமைச்சினூடாக நான் வடக்கு, கிழக்கு, மலையகம் உட்பட தமிழ் கல்வி வளர்ச்சிக்கென மேற்கொண்ட செயற்றிட்டங்களுக்காக ஒத்துழைப்புக்கள் வழங்கப்படாத நிலையில் முட்டுக் கட்டைகளே அதிகமாக காணப்பட்டன.

ஊவாவில் அனேக பாடசாலைகள் அடிக்கல் மட்டுமே நாட்டப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. சப்ரகமுவ மாகாணத்தில் எந்தவொரு தமிழ் மொழிமூல தேசிய பாடசாலையும் இல்லை. தமிழ்க் கல்வி அபிவிருத்தி தொடர்பில் கல்வி அமைச்சர், அமைச்சின் செயலாளர் ஆகியோரின் அக்கறையற்ற செயற்பாடுகள் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

பலமுறை கோரிக்கை விடுத்தும் இசுறு பாடசாலை திட்டத்தில் இதுவரை எந்தவொரு தமிழ்ப் பாடசாலையும் உள்ளடக்கப்படாமை தமிழ்க் கல்வி புறக்கணிப்புக்கு நல்லதொரு உதாரணமாகும்.

இதற்கு கல்வி அமைச்சர் அமைச்சின் செயலாளர் பதில் கூற வேண்டும். வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கென அவுஸ்திரேலியாவிலிருந்து பெருமளவு நிவாரணப் பொருட்கள் கொண்டுவரப்பட்டன.

இவற்றை இந்த மாணவர்களுக்கு பெற்றுக்கொடுக்க கல்வி அமைச்சு எதுவித நடவடிக்கையும் எடுக்காமல் கடந்த நான்கு மாதங்களாக சுங்க திணைக்களத்தில் தேங்கிக் கிடக்கின்றமை வேதனையைத் தருகின்றது.

தமிழ்க் கல்வி அபிவிருத்தி தொடர்பில் கல்வி அமைச்சு அக்கறையின்றி செயற்படுகின்றது. இவ்வாறு தமிழ்க் கல்வி அபிவிருத்திக்கு யார் முக்கியத்துவம் கொடுக்கின்றாரோ அவருக்கே நாம் ஆதரவு வழங்க வேண்டிய நிலையில் உள்ளோம். இது தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களுடன் கலந்துரையாடவுள்ளேன்.

பெரும்பான்மையினர் தமிழ்க் கல்வி தொடர்பில் அக்கறையின்றி செயற்படும் அதே வேளை எமது தமிழ்த் தலைமைகள் தமிழ் மக்கள் தொடர்பில் சிந்தித்து செயற்படு கின்றார்களா? அதுஇல்லைஎனத்தெரிவித்துள்ளார். (ச-5)

## முன்பள்ளி ஆசிரியர் சந்திப்பு பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்விவலயத்துக் குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுடன் நாளை 30 ஆம் திகதி யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற விருந்த சந்திப்பு பிற்போடப்பட் டுள்ளதாக யாழ். வலயக்கல்வி முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் க.விமலநாதன் அறிவித்துள்ளார். (ரு)

## ஜனாதிபதி...

கட்டளையின் அடிப்படையிலேயே நாடுகடத்தப்பட்டதாகவும் அவருக்கான விசா அனுமதி தடைவிதிக் கப்பட்டுள்ள தாகவும் அந்த இணை யத்தளம் குறிப்பிட்டுள்ளது. கடந்தகாலங்களில் அவர் வாடிக் கையாக சென்னைக்குசென்றுவந்துகொண்டிருந்தார்.

அந்தகாலகட்டங்களில் யுத்தம் நடை பெற்றுக் கொண்டிருந்த சமயங்களில் தமது பாதுகாப்பு பிரச்சினைகளை காரணம் காட்டி அவருக்கு அங்கிருக்க அனுமதிவழங் கப்பட்டது.

எனினும் தற்போது அவர் சுயேட்சை வேட்பாளராக போட்டியிடு கின்ற நிலையிலேயே அவர் இந்தியாவுக்குள் செல்வதற்கு தடை விதிக்கப் பட்டுள்ளது.

இதற்கான சிறப்பு அறிக் கை ஒன்று அனைத்து விமான நிலையங் களுக்கும் இந்திய மத்திய அரசாங்கத்தினால் அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

## ஊரடங்குச்...

அமுல் படுத்தப்பட்டு வந்தது.

எனினும் தற்போது யாழ். குடா நாட்டுக்கு பெருமளவு உல்லாசப் பயணிகள் மற்றும் வெளிமாவட்டங் களை சேர்ந்தவர்கள் என பலர் வருகை தந்துள்ளனர்.

இவற்றைக் கருத்தில் கொண்டு நேற்று முதல் ஊரடங்குச் சட்டம் முழுமையாக தளர்த்தப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்பட்டது. இதன் மூலம் இயல்பு வாழ்க்கை ஏற்படுத் தப்படும் எனவும் சுட்டிக்காட்டப்பட் டது. (ச-5)

## சந்தேகத்தின் பேரில் கைது...

வைத்து விசாரணை செய்யப்பட் டுள்ளவர்களுள் 55 பேர்புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

விடுவிக்கப்பட்டவர்கள் எவ்வித மான குற்றச் செயல்களிலும் சம்பந் தப்படாதவர்கள் என்பது நிரூபணமாகியிருப்பதாகவும், ஏற்கனவே 100 பேர் இவ்வாறு விடுவிக்கப்பட்டிருப் பதாகவும் சட்ட மா அதிபர் கூறினார். தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப் படுபவர்களைத்துரிதமாக விடுவிப்பதோடு ஒரு மாதத்தில் குறைந்தது 100 பேரையா வது விடுவிக்க எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

புலிகள் இயக்க உறுப்பினர்கள் என அடையாளம் காணப்பட்ட சுமார் 11 ஆயிரத்து 500 பேர் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வருகின்றனர். இவர் கள்தவிரவும் இறுதி யுத்தத்தின் போது இடம் பெயர்ந்து நிவாரணக் கிரா மங் களுக்கு வந்து சேர்ந்தவர்களுள் பலர் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டனர்.

அவர்களுள் சந்தேகத்திற்கிட மான வர்கள் தொடர்ந்தும் விசாரிக் கப்பட்டு வந்த நிலை யில், 700 பேர் இவ்வாரம் விடுதலையாகின்றனர். இவர்களைமீளக்குடியமர்த்த அனுப்பி வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# சூடுபிடிக்கிறது தேர்தல் பிரசாரம்...

மரண அச்சுறுத்தல்கள் தமக்கு புதிதல்ல எனத் தெரிவித்திருக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கான எதிர்க் கட்சிகளின் பொதுவேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா முன்னர் விடுதலைப்புலிகளிடமிருந்து மரண அச்சுறுத்தல் வந்ததாகவும் தற் போது ஆளும் அரச தரப்பினரிடமிருந்து வருவதாகவும் குறிப்பிட்டுள் ளார். பதுளையில் நேற்று மாலை நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத் தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிட் டதாவது,

இந்த நாட்டில் நிலவும் இலஞ்சம் மற்றும் ஊழல்களை ஒழித்தால் நான் அளித்துள்ள பத்தாயிரம்ரூபாய் சம்பள உயர்வு உள்ளிட்ட வாக்குறுதிகளை விடவும் மேலதிகமான நன் மைகளை மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க முடியும்.

வேலைவாய்ப்பற்றபட்டதாரிகளுக்கு மாதாந்தம் 2000 ரூபாய் கொடுப் பனவு வழங்கல், சமுர்த்தி கொடுப் பனவை உயர்த்துதல், போக்குவரத் துத்துறையுடன் தொடர்புபட்டவாகன உதிரிப்பாக இறக்குமதிக்கான வரியினை இல்லா தொழித்தல், அரச ஊழியர்களுக்கு 10ஆயிரம் ரூபா சம் பள உயர்வு உள்ளிட்ட பல வாக்குறுதிகளை நான் வழங்கியுள்ளேன்.

இந்த வாக்குறுதிகளை விமர் சிக்கும் எதிரணியினர் இவற்றை எப்படி பொன்சேகா நிறைவேற்றப் போகிறார்? எனக் கேட்கின்றனர்.

இந்த நாட்டில் தற்போது தலை விரித்தாடும் இலஞ்சத்தையும் ஊழலையும் ஒழித்தால் இவற்றை நிறை வேற்றுவது மிகவும் இலகுவானவிடய மாக மாறிவிடும். அதைவிடவும் அதி கமான வேலைகளை நாட்டு மக்க ளுக்காக செய்ய முடியும்.

என்னுடன் இணைந்துள்ள ரணில் விக்கிரமசிங்க, அர்ஜுன ரணதுங்க ஆகியோர் எந்தவித ஊழல் குற்றச்சாட்டுக்களுமற்றவர் கள். அதனால் என்னுடன் இணைந்து ஊழலை ஒழிக்க புறப்பட்டுள் ளார்கள்.

எமக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது. மரண அச்சுறுத்தல்கள் ஒன்றும் எமக்குப் புதி தல்ல. ஏற்கனவே விடுதலைப் புலிகள் எமக்கு மரண அச்சுறுத்தல் விடுத்தார்கள். இன்று அரசதரப்பினர் மரண அச்சுறுத்தல் விடுக்கிறார் கள் என்றார்.

இதேவேளை ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் உறுப்பினரும் முன்னாள் இராணுவ வீரருமான கப்டன் மினிமல் முனசிங்க, சரத் பொன்சேகாவை ஆதரிப்பதாக இக்கூட்டத்தில் அறிவித் தார்.

இதேவேளை நாட்டை அபிவிருத்தி செய்யக் கூடிய சரியான திட்டங்கள் எதிர்க்கட்சிகளிடமில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எதிர்கால சந்ததியினர் அதி களவு நன்மைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் அர சாங்கம் திட்டங்களை வகுத்து செயற் படுத்தி வருவதாக அவர் தெரிவித் துள்ளார்.

மினுவான்கொடையில் நடை பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்ட மொன்றில் கலந்து கொண்டு உரை யாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினால் முன்னெடுக் கப்பட்ட திட்டங்களை பூர்த்தி செய்வ தற்கு மக்கள் ஆதரவளிக்க வேண் டுமென ஜனாதிபதி கோரிக்கை விடுத் துள்ளார்.

உலகின் கௌரவமான நாடாக இலங்கையை மாற்றியமைப்பதற்கு மக்கள் ஆதரவினை வழங்க வேண் டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த தேர்தலின் போது முன் வைக்கப்பட்ட மஹிந்த சிந்தனைக் கொள்கைத் திட்டத்தின் 95வீதமான வாக்குறுதிகள் ஏற்கனவே நிறை வேற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித் துள்ளார்.

பொருளாதார நெருக்கடி நிலவிய காலங்களிலும் மக்களுக்கு சலுகைகளை வழங்குவதற்கு அர சாங்கம் ஒரு போதும் பின்நிற்க வில்லை என அவர் குறிப்பிட்டுள் ளார். (ச-5)

## யாழ்தேவி ரயில் ஏப்ரல் மாதத்திலிருந்து ஓமந்தைவரை நீடிக்க நடவடிக்கை

யாழ்தேவி ரயில் சேவைஎதிர் வரும் ஏப்ரல் முதல் ஓமந்தைவரை நீடிக் கப்படுமென ரயில்வேபொது முகாமை யாளர் பி.பி.விஜயசேகர தெரிவித் தார். தாண்டிக்குளத்தில் இருந்து ஓமந்தை வரையான 10 கிலோ மீற்றர் நீளமான ரயில் பாதைகள் மீளமைக் கும் பணிகள் துரிதமாக முன்னெ டுக்கப்படுவதோடு ஓமந்தை ரயில் நிலையத்தை நிர்மாணிக்கும் பணிக ளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுமார் இரு தசாப்தங்களின் பின் னர் யாழ்தேவி ரயில் சேவை ஓமந்தை வரை பயணிக்க உள்ளதாகவும் பொது முகாமையாளர் பி.பி.விஜய சேகர கூறினார்.

402மில்லியன் ரூபாய் செலவில் ரயில் பாதைகள் புதிதாக நிர்மாணிக் கப்பட்டு வருகிறது. ஓமந்தை ரயில் நிலையத்தை மீளமைக்கும் பணி களை பிரதியமைச்சர் லயனல் பிரே மசிறி பொறுப்பேற்று முன்னெ டுத்து வருகிறார். (ச)

## தமிழ்நாட்டு...

செய்தபின், மாவட்ட எஸ்பி. அலுவலகத் திலிருந்து, அகதிகள் இலங்கை செல்ல எவ்வித ஆட்சேபனையும் இல்லைஎன சான்று கொடுத்தபின் அகதி களுக்கு கடவுச்சீட்டை வழங்குகின்றனர். (ச-5)

## வைத்தியர்...

கட்டுப்பாட்டுப்பகுதியில் பணியாற் றிய மருத்துவர்கள் புலிகளுக்கு ஆதரவாக அங்கு இருந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி ஊடகங்களுக்கு தெரிவித்த குற் றச்சாட்டின் அடிப்படையில் இவர் கள் அரசக்கட்டுப்பாட்டுப்பகுதிக்கு வந்த பிறகு கைது செய்யப்பட்டனர்.

அரசால் தடுத்துவைக்கப்பட்டி ருந்த இவர்களில் 4 மருத்துவர்கள் ஒக்டோபர் மாதம் விடுவிக்கப்பட்டனர். 5 ஆவது மருத்து வரான சிவ பாலன் நேற்றுக் கொழும்பு நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளார். (ச-3,5)

## காணாமல் போனோரை...

கையடக்கத் தொலைபேசியிலிருந்து அழைப்பு ஒன்று வந்துள்ளது.

அதில் தெல்லிப்பழை பிரதேச செயலகத் துக்குட்பட்ட பிரதேசங் களில் கடந்த காலங்களில் காணா மல் போனவர்களை விடுவிப்ப தாக வும் இந்த தொலைபேசி இலக்கத்தை காணாமல் போனவர்களின் உற வினர்களிடம் கையளிக்குமாறும் கூறப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட தொலைபேசி இலக் கம் அவ் கிராம சேவையாளர் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு பிரஸ்தாப நபரிடம் தொடர்பு கொண் டால் உங்களுடைய உறவினர்கள் விடுவிக்கப்படுவார்கள் என கிராம சேவையாளரால் தெரிவிக்கப்பட்டது.

குறித்த தொலை பேசி இலக்கத் தின் ஊடக பொதுமக்கள் தொடர்பு கொண்ட போது தாம் பலாலியிலிருந்து மேஜர் சீலன் கதைப்பதாகவும் ஒருவரை விடுவிப்பதற்கு 3 இலட்சம் ரூபாயுடன் ஒவ்வொருவரும் தமது பணத்துடன் யாழ். சிறைச்சாலைக்கு அண்மித்த ஓர் இடத்தில் பணத்தை கையளித்தால் 51 ஆவது படைப்பிரிவிலிருந்து, காணாமல் போனவர் களை விடுவிப்பதாகவும் கூறப்பட் டுள்ளது.

இந்நிலையில் காணாமல் போன வர்களின் உறவினர்கள் 5 பேர் 8 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் பணத் துடன் யாழ்ப்பாணச் சிறைச்சா லைக்கு அண்மித்து காத்திருந்த வேளை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இவர்களை தனியாக அழைத்து பணத்தைப் பெற்று தப்பிச் சென் றுள்ளனர்.

51ஆவது படைப்பிரிவிலிருந்து காணா மல் போனவர்கள் விடுவிக் கப்படுவர் என்ற நம்பிக்கையில் காத்திருந்தவர்கள் தமது உறவினர் கள் விடுவிக்கப்படாத நிலையில் இச் சம்பவம் தொடர்பாக 51ஆவது படைப்பிரி விற்கும் யாழ். பொலிஸ் நிலையத்திற்கும் சென்று முறைப் பாடு செய்துள்ளனர். (ச-7)

## யாழ்ப்பாண...

தொலைபேசி மூலம் அறிவிப்பதாக வும் தெரியவந்துள்ளது.

தற்போது உங்கள் குடும்பத்தில் காணாமல் போனவர்கள் இராணு வத்திடம் இருப்பதாகவும் பொய்ப் பிர சாரம் செய்கின்றனர். காணாமல் போனவர் களை கண்டு பிடித்து தருவ தாகச் சொல்லி லட்சக்கணக்கில் பணம் பெற்றுக் கொண்டனர் என தெரிய வந்துள்ளது.

இப்படிப்பட்ட திருட்டுக் கும்பல் இராணுவத் திற்கு அபகீர்த்தி விளைவிக் கின்றது.

இவ்வாறு கப்பம் பெறும் கும்பல் உங்கள் பிரதே சத் தில் தென் பட்டால் அருகில் உள்ள இராணுவ முகாம் அல்லது பொலிஸ் நிலை யத்துக்கு தெரியப்படுத் துங்கள் உங்களின் இரக சியம் பேணப்படும் என் றுள்ளது. (ச)

A/L 2012 கலை, வர்த்தக, கணித, உயிரியல் பிரிவுகள்
அனுமதிகள் இன்று முதல்...
NEC Clock Tower Road, Jaffna.
(பெருமாள் கோவிலுக்கு அருகாமையில்)
ஆரம்பம் ஜனவரி 02 சனிக்கிழமை காலை 8.00 மணி

A SPECIAL ENGLISH COURSE
* ஆரம்ப நிலையில் இருந்து உயர்கல்வி வரை
* விளக்கமான, விரிவான, கற்கை நெறி
* BEGIN-BUILD - ENRICH
* A TOTAL IMMERSION COURSE
* சகல மொழித்திறன் கொண்டது
* பேச, வாசிக்க. எழுத. இலக்கண இலக்கிய மயமான
* இருவர் இணைந்த சேவை
மீண்டும் ஆரம்பம்
வாரஇறுதி வகுப்புக்கள்
03.01.2010 காலை 10.00
ஆசிரியர்கள் த.ந.பஞ்சாட்சரம் செ.தியாகராஜா
மேலதிக விபரங்கட்கு : நிர்வாகி
NEW SCIENCE HALL
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

கிறிஸ்ரல் சென்ரர்
நெல்லியடி கிளை:திக்கம்
'SPOKEN ENGLISH' With 'GRAMMAR'
பிரிவு III ஆரம்பம்-30.12.2009 நேரம்:2.00 பி.ப.
by:S.ரஞ்சித் 'யாழ்.நகர் ஆசிரியர்'
(O/L எடுத்த மாணவர்களுக்கு)
2012 A/L கலை,வர்த்தகம், கணிதப் பிரிவு ஆரம்பம்-03.01.2010
Note:கணிதப் பிரிவில் 20 மாணவர்களுக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்படும்.
(152)

டெங்கு காய்ச்சல் பற்றி விழிப்பாக இருப்போம்

• பகல் வேளைகளிலேயே பெரும்பாலும் கடிக்கின்ற சிறிய வகை நுளம்பினங்களால் பரப்பப் படுகின்றது. இதனால் சில வேளைகளில் சிறு பிள்ளைகளில் உயிராபத்தும் ஏற்படலாம்.
• டெங்கு காய்ச்சல் ஏற்பட்டால் அறிகுறிகளாக, அதிகரித்த காய்ச்சல், தலையிடி, தசைகள், மூட்டுக்களில் நோவு, தோலின் கீழ் சிவப்பு நிற தழும்புகள் ஆரம்பத்தில் ஏற்படலாம்.
✣ டெங்கு நோய்க்கான அறிகுறிகளென சந்தேகித்தால் உடனடியாக தகுந்த வைத்திய ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
தகவல்: சுகாதாரத் திணைக்களம் யாழ்ப்பாணம்.
அனுசரணை: TRRO
நிதியுதவி: UNHCR
(c-4073)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.12.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.